எட்டுத்தொகை அகநூல்களில் குறுந்தொகை ஐங்குறுநூறு

உளவியல் படைப்பாக்கம்

முனைவர் பட்ட ஆய்விற்குரிய **(Ph.D)** முன் வரைவு ஆய்வறிக்கை

முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)

திருமதி. ந.சுதா

பதிவு எண் : **20PHTMF004**

ஆய்வு நெறியாளர்

முனைவர் ச.பிரியதர்சினி. எம்.ஏ.,எம்.பில்., பிஎச்.டி.,

தமிழ்த்துறை

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்

கோயம்புத்தூர் - 641 043.

டிசம்பர்- 2023

எட்டுத்தொகை அகநூல்களில் குறுந்தொகை ஐங்குறுநூறு உளவியல் படைப்பாக்கம்

முன்னுரை

சங்க இலக்கியமானது உலகப் பேரிலக்கிய கருவூலங்களில் ஒன்றாகும். இதற்கான காரணம் வாழ்வு அனுபவங்களை மானுட அனுபவமாக மாற்றியதே ஆகும். எடுத்துரைத்த முறை, சொல்லிய விதத்தைக் காரணமாகக் கூறலாம். நிலமும்,பொழுதும் உயிர் வாழ்க்கையை தீர்மானித்தது போல முதல் கரு உரிப்பொருள் இயக்கத்தை கட்டமைத்தன. இக்கட்டமைப்பு இயற்கையோடு பொருந்தி வாழ்ந்த வாழ்க்கையை பிரதிபலித்தது. இதில் எதார்த்தமும் புனைவும் ஒன்றோடு ஒன்று பிணைந்து வருவதால் காலம் உள்வெளி என எல்லைகள் பரந்து பட்டதாகக் காண முடிகின்றது. மேற்குறிப்பிட்ட புரிதலே ஆய்வுக்கு அடிப்படையாகவும் அமைகின்றன.இலக்கியம் குறித்த ஆய்வுகளில் அணுகுமுறை ஆய்வு என்பது தற்போது வளர்ந்து கொண்டிருக்கிறது. அவற்றிற்கண் உளவியல் நோக்கிலான அணுகுமுறையை சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை அகநூல்களான குறுந்தொகை ஐங்குறுநூற்றில் பொருத்திப்பார்க்க வேண்டும் என்ற ஈடுபாடு அதிகமாகத் தோன்றியது. காரணம் இலக்கியத்திற்கும் உளவியலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மனிதனின் மனஉணர்வை வெளிப்படுத்துவதையே முதன்மையாகக் கொண்டிருக்கின்றன. தமிழில் இருக்கும் இலக்கியங்கள் அனைத்தும் வாழ்க்கையை அடிப்படையாக வைத்து அமைந்த நாடகப்பண்பினைக் கொண்டவை ஆகும். மனிதனின் ஒவ்வொரு செயலுக்கும் பின் உள்ளமே உந்து சக்தியாக செயல்படுகிறது. முழுக்க முழுக்க தன்னுணர்ச்சிப் பாடல்களாக மட்டுமே அமைந்துள்ளன. சங்க இலக்கியங்களில் இத்தகு உணர்வு நிலையை பரவலாக காணலாம்.வாழ்க்கை ஒரு கலை. அதனை மக்கள் உய்த்து உணர வேண்டும் என்பதற்காகவே சங்கப் பாடல்கள் இயற்றப்பட்டன. சிக்மண்ட் பிராய்டு கருத்துப்படி உணர்வு நிலைகளைக் கட்டுப்படுத்தவும் சமூக மதிப்பீட்டில் அகநூல்களில், அகவாழ்க்கை ரீதியாக உளவியல் கூறுகள் பற்றியும், திருமணப் பந்தத்தை உளவியல் ரீதியாகவும், ஓர் ஆணைப்பற்றிய பெண்ணின் மனப்பதிவையும், உணர்ச்சி, அறிவு என்னும் இரண்டும், வாழ்க்கைக்கு அடிப்படையான ஒன்றாக இருக்க வேண்டியதையும், மனப்பக்குவம் குறித்த உளவியல் சிந்தனையையும் மனதில் மறைந்த பகுதியாக இருக்கக்கூடிய பிராய்டு வகுத்த உளவியல் பகுப்பு முறையை மையமாகக்கொண்டு நனவிலி மனதை சமநிலைக்குள் கொண்டு வந்து மீண்டும், மீண்டும் சிந்தித்துப் பார்த்துச் செயல்பட வேண்டும் என்று ஆராய்ந்து எடுத்துரைப்பதே இவ்வாய்வின் முக்கியத்துவமாக அமைகின்றது.

ஆய்வுத் தலைப்பு

எட்டுத்தொகை அகநூல்களில் குறுந்தொகை ஐங்குறுநூறு உளவியல் படைப்பாக்கம் என்பது ஆய்வுத் தலைப்பாகும்.

ஆய்வு நோக்கம்

எட்டுத்தொகை அகநூல்களில் குறுந்தொகை ஐங்குறுநூற்றுப் பாடல்கள் புலவர்கள் இயற்றிய வெறும் பாடல்கள் மட்டுமல்ல இது மக்கள் கடைப்பிடித்து வாழ வேண்டிய

வாழ்க்கை நெறிமுறைகளையும் வகுத்துக்கூறுகின்றன. வாழ்க்கையில் ஏற்படுகின்ற மகிழ்ச்சி,ஏமாற்றம்,உளப்போராட்டச்சிந்தனைகள் ஆகியவற்றை மேற்கொண்டு வாழ்வது எவ்வாறு என்பது அவசியமாகும். அப்படி உளவியல் ரீதியான கருத்துக்களைக் கொண்டு வாழ்க்கையை எவ்வாறு வாழ வேண்டும் என்பதைக் கூறுவதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது.

கருதுகோள்

குறுந்தொகை ஐங்குறுநூற்றுப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு உளவியல் ரீதியான கருத்துக்கள் இந்த இரண்டு அகநூல்களில் உள்ளனவா, வாழ்க்கைக்கு ஒத்துப்போகின்றதா என்பதை ஆய்வதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

ஆய்வு எல்லை

எட்டுத்தொகை அகநூல்களில் குறுந்தொகை ஐங்குறுநூறு முழுவதும் ஆய்வு எல்லையாக அமைகின்றன.

ஆய்வு ஆதாரங்கள்

முதன்மைசான்றாதரங்களாக குறுந்தொகை ஐங்குறுநூறு முழுவதும் அமைகின்றன.தி.கு.ரவிச்சந்திரன் அவர்களின் சிக்மண்ட் பிராய்ட் அவர்களின் உளவியல் சார்ந்த நூல்கள், உளவியல் ரீதியாக எழுதப்பட்ட நூல்கள், சங்க இலக்கியத்தில் உளவியல் ரீதியாக அமைந்து இருக்கும் நூல்கள், பக்தி இலக்கியங்கள், ஆய்வேடுகள், ஆய்வுக் கட்டுரைகள் அகராதிகள், நிகண்டுகள், இணையதளங்கள் முதலானவை துணைமைச் சான்றாதரங்களாக அமைகின்றன.

ஆய்வு அணுகுமுறை

எட்டுத்தொகை அகநூல்களில் குறுந்தொகை ஐங்குறுநூறு உளவியல் படைப்பாக்கம் என்னும் இவ்வாய்வானது விளக்கமுறை அணுகுமுறையாகவும்,பகுப்புமுறை ஆய்வாகவும், பாடல்களின் உட்கருத்தை உளவியல் பார்வையில் காணும் இடத்து உளவியல் அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வுப்பகுப்பு

இவ்வாய்வேடு முன்னுரை முடிவுரை உட்பட நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

இயல் 2 - உளவியல் அறிமுகம்

இயல் 3 - தலைவன் தலைவி கூற்றில் உளவியல்

இயல் 4 - தோழி கூற்றில் உளவியல்

இயல் 5 - வாயில்கள் வழி உளவியல்

முடிவுரை

ஆய்வுமுன்னோடிகள் - நூல்கள் /ஆய்வேடுகள்

வ.எண்	ஆய்வுத்தலைப்பு	ஆய்வாளர் ஆசிரியர்	நெறியாளர்	பல்கலைக்கழகம்	பதிப்பு
1.	சங்கஅக இலக்கியத்தில் உளவியல் போக்கு	சேஷாத்திரி	வெ.த.மாணிக்கம்	பச்சையப்பன் கல்லூரி – சென்னை	1986
2.	தமிழ்க்காதல்	வ.சுப.மாணிக்கம்	-	மெய்யப்பன் பதிப்பகம் - (சிதம்பரம்)	2009
3.	மனதைக் கட்டுப்படுத்துவது மற்றும் அழுத்தத்திலிருந்து விடுபடுவது எப்படி	எஸ். சூரியமூர்த்தி	-	பாவை பப்ளிகேசன்(சென்னை)	2009
4.	சங்க மாந்தர் வாழ்வியல் உளவியல்	சங்கீதா	திருநாவுக்கரசு	பாரதியார் பல்கலைக்கழகம் (கோவை)	2012
5.	உணர்வெழுச்சி	தி.கு.இரவிச்சந்திரன்	-	அடையாளம் (பதிப்பகம்)	2013
6.	மக்கள் நோக்கில் சங்க இலக்கியம்	அறிவுநம்பி	-	சுபம் பிரிண்டர்ஸ் (புதுச்சேரி)	2014
7.	ஆழ்மனத்தின் அற்புத சக்தி	நாகலட்சுமி சண்முகம்	-	மஞ்சுள் பப்ளிஷிங் ஹவுஸ் சென்னை.	2015
8.	சங்கஅக இலக்கியத்தில் உளவியல் பார்வையில் மகளிர்	வசந்தி	கந்தம்மாள்	மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்	2016
9.	சிக்மண்ட் ப்ராய்ட்(கனவுகளின் விளக்கம்)	நாகூர்ரூமி	-	விஜயா பதிப்பகம் (கோவை)	2016

இயல் 2

உளவியல் அறிமுகம்

மனிதனின் எண்ணத்திற்கு தோற்றுவாயிலாக அமைந்து இருப்பது மனம். மனித மனமான உள்ளம் பற்றிய அறிவியல் ஆராய்ச்சியை உளவியல் என்பர். 1590 இல் புருடால்ப் கோக்கில் (Rudolf Goeckle) என்பவர் தான் முதன் முதலாக **'உளவியல்'** என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். சைக் (Psyche) என்ற கிரேக்கச் சொல் ஆன்மாவைக் (soul) குறிக்கும். லாகாஸ் (Logos) என்ற கிரேக்கச் சொல் அறிவு அல்லது ஆய்வு என்று பொருள்படும். எனவே Psychology என்ற ஆங்கிலம் சொல் அதாவது கிரேக்கச் சொற்களின் கூட்டு வடிவமானது ஆன்மாவைப் பற்றியது என்றும், மனத் தத்துவத்தைப் பற்றியது என்று குறிப்பிடுவர். உளவியல் மனிதர்களின் நடவடிக்கைகளை ஒழுங்குமுறையாக அறிகின்ற ஓர் அறிவியல். உளவியல் பல துறைகளை உடைய அறிவியலாகும். எல்லாத் துறைகளிலுமே அதனுடைய முக்கிய நோக்கம் மனிதர்களின் நடத்தையை முழுமையாக ஆய்வதாகும். **மனித உள்ளம் உள்ளத்தைத் தன்னகத்தே கொண்ட உடல், இவ்வுடலில் தோன்றும் உணர்வுகள் அவ்வுணர்ச்சிகளின் வெளிப்பாடாக அல்லது வடிகாலாகத் திகழும் நடத்தை ஆகியவற்றை உள்ளடக்கியது உளவியல்.** உளவியல் மனிதனின் செய்கைகள், புலனுணர்ச்சிகள், நடவடிக்கைகள் ஆகியவற்றை அறிய உதவும் ஓர் அறிவியலாகும். மனிதன் தன்னை அறியாமல் அல்லது ஒரு துன்பகரமான சூழலில் இருந்து தப்பிக்கும் அல்லது தவிர்க்கும் பொருட்டுப் பல காரணங்களைத் துணைக்கு அழைத்துக்கொள்ளும் போது செயல்பாட்டிற்கான காரணத்தை அறிய முற்படுவது உளவியல் எனப்படும். மனிதனின் ஒட்டுமொத்த செயல்பாடுகளையும் அதற்கான காரண காரியங்களையும் கண்டு ஆராயும் ஓர் அறிவியல் துறை உளவியல் ஆகும்.

தமிழில் உளவியலின் வளர்ச்சி நிலைகள்

தமிழில் தோன்றிய பழமையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் மூன்று அதிகாரங்களில் பொருளாதிகாரம் தமிழரின் வாழ்வைக் காட்டும் மிகப்பெரும் களஞ்சியமாகத் திகழ்கிறது. காதல் வாழ்வின் பல்வேறு படிநிலைகளை தெளிவாகப் பேசுகின்றது. அகம், புறம் பற்றிய செய்திகள் மிகுதியாகும். அகமானது மனம் என்னும் சொல்லிற்கு நேரான மற்றொரு சொல் உள்ளது. நச்சினார்க்கினியர் "யாண்டும் உள்ளத்து உணர்வே நுகர்த்து இன்முறுவதோர் பொருளாதலின் அதனை அகம்" என்று தொல்காப்பிய நூற்பாவிற்கு விளக்கம் அளிக்கும் போது, உள்ளத்து உணர்வு அகம் என்று சுட்டுகின்றார். உயிர்களின் அறிவைப் பற்றி பேசும் போது ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள உயிரினங்களைப் பகுத்துக்காட்டி, ஆறாவது அறிவு மனிதர்க்கு மட்டுமே உண்டு என்றும், அந்த அறிவு 'மனம்' தொடர்பானது என்றும் தெரிவிக்கின்றார். "பண்டையத் தமிழ் இலக்கணத்திலும் மனவுணர்வு பற்றிய செய்திகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. உள்ளம் எனப்படுவது நனவு உள்ளத்தையே குறிப்பதாகும். புலனுணர்ச்சிகள் (Sations). சாயல்கள் (அ) பிம்பங்கள் (Images), மனவுணர்ச்சிகள் (Feelings) போன்ற பல்வேறு கூறுகளைக் கொண்ட அமைப்பே உள்ளமாகும் என்ற இன்றைய உளவியல் கொள்கையுடன், தொல்காப்பியரின் கொள்கை ஒத்துப் போவதை

அறிய முடிகின்றன'' பிராய்டின் நனவிலி எண்ணங்கள் ஆழ்ந்த கருத்துக்கள் நிறைந்த பகுதியாகும். கருத்தியல் தொடர்பு நிகழ மொழி அவசியம்.



மனத்தின் மூன்று நிலைகள்

''மனித நடத்தைக்கு அடிப்படையாக இருப்பது மனம். "மனித மனம் வாழ்வின் விளைநிலம், மனத்தின் தன்மை எதுவோ அது தான் மனிதனின் தன்மை. மனத்தின் மாண்பு தான் மனிதனின்மாண்பு. மனத்தின் உயர்வு தான் மனிதனின் உயர்வு என்கிறார்''[43] மகரிஷி.

இம்மனம் மூன்று விதமான நிலைகளைக் கொண்டதாக கருதப்படுகிறது.

- **.நனவுப்பகுதி. இடைநிலை மனம். நனவிலி மனம்**

நனவுப்பகுதி

மனமானது தூங்காமல் விழிப்புடன் இருக்கும்போது இருக்கக்கூடிய அனுபவங்களே ஆகும்.

இடைநிலை மனம்

இடைநிலை மனம் என்பது நனவுப்பகுதியில் இருக்கும் அனுபவங்களை சில பதிந்து கிடக்கும். நமக்குத் தேவையான போது வேண்டிய செய்திகளை வரவழைத்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

நனவிலி மனம்

பண்படாத ஊக்கிகள், வெற்றி பெறாது ஒடுக்கப்பட்ட எண்ணங்கள் சமூகத்தில் வெளிப்படுத்த முடியாத மனவெழுச்சிகள் ஆகியவை நனவிலியில் மறைந்து புதைந்து கிடக்கின்றன.

தமிழ் இலக்கியங்களை ஆய்ந்த கற்றுத் தேர்ந்த அறிஞர் திரு.வி.க. அவர்கள் மனத்தின் அமைப்பு முறைகளை தமிழ் மரபையொட்டி வகைப்படுத்தியுள்ளார். அவர் மனத்தின் மூன்று நிலைகளாக பகுத்துள்ளார்.

- .மேல் மனம் அல்லது புறமனம்

- .நடுமனம்
- .அடிமனம்

என்ற மூன்றாக அவர் பகுத்தாலும் மனம் ஒன்றே, ஒரே மனம் அ∴து அடையும் பக்குவத்திற்கு ஏற்ப மூன்று நிலைகளை அடைகிறது என்கின்றார்.

உளவியலில் இருக்கும் கூறுகளை விளக்கப்பட்டு, உளவியல் இருக்கும் சாராம்சம் என்னவென்றும்,அறிஞர்களைப் பற்றிய கருத்துக்களையும் விரிவாக எடுத்துரைக்கப்படுகின்றன. உளவியலில் உள்ள நனவிலி மனக்கருத்துக்களை விரிவாக எடுத்துரைக்கப்படுவது மட்டுமல்லாமல் உளவியல் பற்றிய அடிப்படைச் செய்திகளும் முதல் இயலில் ஆராயப்பட்டுள்ளன.

இயல் - 3
தலைவன், தலைவி கூற்றில் உளவியல்

ஆண்மைப் பெற்ற பெருஞ்சிறப்பைப் புறப்பாடல்களில் காணுவது போல, பெண்மை பெற்ற பெருஞ்சிறப்பை அகப்பாடல்களின் வழி அறியலாம். திருமணத்திற்கு முன்பும், பின்பும் திண்ணிய முறையில் தலையாயப் பண்பு நலன்களைக் கொண்டவளே அகப்பாடல்களில் இடம்பெறும் தலைவியாவாள். எல்லா நிலைகளிலும் அன்பு நலம் கனியப் பெற்ற அவள் வாழ்வே அவளைத் தன்னிகரற்றத் தன்மையுடையவளாகக் இருக்கின்றாள்.

“அகத்திணைப் பாடல்கள் உளவியல் பாடலானதற்குக் காரணம் தலைவி என்னும் தலைமை மாந்தரே அடிப்படை ஆவாள். அவளது உணர்வுகளைச் சுற்றியே தலைவனின் எண்ணமும் பிற துணைமாந்தர்களின் எண்ணங்களும் படர்கின்றன. மாந்தர்களின் உணர்ச்சிகளும், தலைவி என்னும் தலைசிறந்த பாத்திரக் கூற்றே எல்லா மாந்தர்களின் பண்புகளையும் வளர்க்கும் சிறந்த உளவியல் கூற்றுப் பாடல்களாக உள்ளன”.ஆ. அமிர்தகௌரி

அகப்பாடல்களில் தலைவி, தலைவனின் தனித்தன்மைகள்

அக வாழ்க்கையில் தலைவன் என்ற ஒன்று தனிப்பட்ட ஒன்றையும், தனிப்பட்ட ஒருவனையும் உணர்த்தாது. காதல் வாழ்க்கையில் காதலனாகவும், இல்லற வாழ்க்கையில் கணவனாகவும், வாழும் ஒருவனையே குறிக்கும். தமிழ் இலக்கணம் மற்றும் இலக்கியங்களில் தலைவனைப் பற்றிக் கூறும் செய்திகள் தமிழரின் வாழ்க்கை நிலையைப் புலப்படுத்துகின்றன. சங்க இலக்கியத்தில் தலைவனைத் தலைமகன், கிழவன், கிழவோன் என்றெல்லாம் குறிப்பிடுகின்றன. காதல் வாழ்க்கை, கற்பு வாழ்க்கை என்ற இரண்டில் தலைவன் காதல் (களவு)

வாழ்க்கையில், வேட்கை, காதலியிடம் பேச்சுக் கொடுத்தல், அவளைத் தொட்டுப் பயிற்றுவித்தல், இடம் பெற்றுத் தழுவுதல், தோழியின் துணையைப் பெற்றுக் கூடுதல், மடலேறுதல் (ஆண்களுக்கான ஒன்று) பற்றிக் கூறுதல் முதலானவை காதல் வாழ்க்கையில் நிகழக்கூடிய ஒன்றாகும். அதாவது தலைவி, தலைவன் திருமணத்திற்கு முன்பு நிகழக்கூடிய ஒன்றாகவே கருதப்படுகிறது. திருமணத்திற்கு பின்பு வாழக்கூடிய வாழ்க்கையை கற்பு வாழ்க்கை என்றும் சங்க கால மக்கள் வாழ்க்கையை இவ்வாறு வாழ்ந்து வந்துள்ளனர். இதனை தமிழ்நெறி என்றும் கூறினர். களவையும், கற்பையும் 'கைகோள்' என்பர். இவற்றில் கை என்பது கைப்பற்றி வாழும் ஒழுக்கத்தைக் குறிக்கும். இந்த ஒழுக்கம் பற்றிய செய்திகள் தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் கற்பியலில் பின்வருமாறு கூறுகிறார்.

தலைவன் தலைவி மீது மிகுந்த அன்புடையவனாகக் காட்டப்படுகிறான்.

"ஒடுங்குஈர் ஓதி ஒண்நுதற் குறுமகள்
நறுந்தண் நீரள்; ஆர்அணங் கினளே" (குறுந். பா. 70)

தலைவன், தலைவியை அழகுடையவள், மென்மையானவள், மெல்லிய தன்மையுடையவள் என்று தலைவியை வர்ணிக்கும் தலைவனின் தனித்தன்மைகளும் பாடல்கள் மூலம் அறியமுடிகின்றன. சங்க அகப்பாடல்களில் பெண்ணின் உறுப்பு நலன்கள் சிறப்பிடம் பெறாமல் உள்ளத்து இயல்புகளே சிறப்பிடம் பெறுகின்றன. புற உறுப்புகளால் ஏற்படும் உணர்ச்சிகளைப் புறக்கணித்து அக உணர்ச்சிகளின் ஆழத்தை எடுத்துக் கூறவே தலைவி படைக்கப்பட்டுள்ளாள். இதனால்தான் அகப்பாடல்களில் ஆணும் பெண்ணும் "ஒத்த கிழவனும் கிழத்தி"யுமாகவே சங்கப் பாடல்களில் சுட்டப் பெறுகின்றனர்.

"குழந்தைப் பருவத்தில் தலைவி தன் உடன்பிறந்தாருடன் (தமையன், தமக்கை, தம்பி, தங்கை) விளையாடியதாக அகப் பாடல்களில் ஒரு குறிப்பும் காணப்படவில்லை என்னும் உண்மை நம்மை சிந்திக்க வைக்கிறது. இளமை முதற்கொண்டே தலைவியின் தன்னிகரற்ற தன்மையைச் சிறப்பிப்பதற்கெனப் புலவர்கள் இத்தகைய உத்தியைக் கையாண்டனர்" என்று (ஈ.கோ. பாஸ்கரதாஸ், அகப்பொருள் பாடல்களில் தலைவி, ப.32) தரும் விளக்கம்தலைவியின் சிறப்பை உணர்த்துகின்றன.

சங்க அகப்பாட்டில் கற்பனை மாந்தரின் பேச்சாக உள்ளதே தவிரப், பாடும் புலவர்கள் அங்கே இருப்பதில்லை. அவர் படைத்த மாந்தர்கள் பேசுதல் உண்டே தவிரப், புலவர்கள் பேசுவதில்லை. அவ்வாறு, மாந்தர்கள் பேசும் கூற்றை மூன்று வகையாகப் பகுக்கலாம். அவை

- ➢. மற்றொருவரை முன்னிலைப்படுத்தி ஒருவரே பேசுவது
- ➢. தம் நெஞ்சிற்குக் கூறிக் கொள்வது
- ➢. அ.்.றிணைப் பொருளை முன்னிலைப்படுத்தி விளித்துப் பேசுவது

என்று குறிப்படுவார் இராம. பெரிய கருப்பன்.

அகப்பாடல்களில் தலைவன்

தலைவியை நினையாது போரில் ஈடுபட்ட தலைவனின் மன உணர்வுகள் புறத்திலும், காதலுக்கு சிறப்பிடம் தந்து காதலியை நினைத்துருகும் தலைவனின் மன உணர்வுகள் அகத்திலும் இடம் பெறுகின்றன. என்கிறார் இராமகிருஷ்ணன். ஆ.

தலைவன் கூற்று நிகழும் இடங்கள்

தலைவன் தன் நெஞ்சோடு கிளத்தலுக்குரிய, தனிமொழிப் பாடல்களே சங்கப் பாடல்களில் மிகுதியாக உள்ளன. காரணம் என்னவெனில் தலைவிக்குத் தோழி தக்க உறுதுணையாக அமைந்தது போலத் தலைவனுக்குப் பாங்கன் உள்ளம் கலந்த உறவுடையவனாக அமையாமல் இருப்பதே காரணமாகும். எனவே தலைவனின் கூற்றுக்கள் அவன் தன் நெஞ்சிடமே மிகுதியாக நிகழ்கின்றன.தலைவன் தலைவியின் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு முக்கியக் காரணம் மனமே ஆகும். அம்மனவுணர்வுகளை வெளிப்படுத்த ஏதாவது ஒன்றின் மீது நாட்டம் கொள்கின்றான்.அகவாழ்க்கையில் இயற்கையை அடிப்படையாக கொண்டும், உளவியலில் மனதை அடிப்படையாக கொண்டும், வெளிப்படுத்துவதையே தலைவன் தலைவியின் மையக்கருத்தாக இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

இயல்-4

தோழி கூற்றில் உளவியல்

சங்க இலக்கியப் பாடல்கள் நாளொரு வண்ணமுமாக வலம் வரக் காரணம் வாழ்க்கை, அனுபவம் எனும் இரண்டையும் தாண்டி அவை மூன்றாவதாக படைத்துக் காட்டக்கூடிய பாத்திரங்களாகும். ஒரு கவிதை உயிருள்ளதாக இருக்க வேண்டுமானால் அக்கவிதையில் மாந்தர்கள் இடம் பெற்று இருக்க வேண்டும்.. அவ்வாறு இல்லாத பாடல்கள் இருப்பின் சுவாசம் இல்லாத உடம்பு போலவும், வாசனை இல்லாத மலர்கள் போலவும் பயனற்றுப் போய்விடும். எனவே இலக்கியப் பாடல்களில் பாத்திரப் படைப்புகள் இன்றியமையாத தேவை ஆகும். சங்க அகநூல்களில் பாத்திரங்களின் பெயர்களானது சுட்டப்படவில்லை என்றாலும், பாடுபொருளின் மையங்களாகத் தலைவன், தலைவி, தோழி, ஆகியோர் திகழ்கின்றனர். அவ்வாறு வலம் வரும் பாத்திரங்களில் புலவர்களுக்குப் பிரியமானதும், கதையை நிகழ்வை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்வதும் ஆண், பெண் பேதமின்றி அனைவரும் விரும்புவதும், நல்லறிவும் நற்குணமும், அனைவரிடமும் அனுசரித்துச் செல்லும் ஆற்றலும், தனக்கென வாழாத்

தனிப்பெருமையும், கொண்டு தன்னைச் சார்ந்தோரின் வளமான வாழ்வே தன்வாழ்வெனக் கொண்டு தன்னிகரற்ற பாத்திரமாய்த் தன்னையே கரைத்துக் காண முடியாக் காற்றின் நிலையாய் நின்று அனைவரின் மனதிலும் நீக்கமற நிறைந்து இன்பம் ஊட்டும் உன்னதப் பாத்திரமே தோழி ஆவாள். தலைமை மாந்தர்களின் வாழ்வியலை அர்த்தமுடைய வாழ்வாக மாற்றக்கூடிய தியாக நிகழ்வில் அப்பாத்திரம் எதிர் கொள்ளும் உளவியல் சிக்கல்களையும், அச்சிக்கல்களைக் களையும் மிகு ஆளுமைத் திறனையும், பண்பட்ட உள்ளத்தை கூறுவதாக இவ்வியல் அமைகிறது.

தோழியின் சிறப்பு

தோழி என்னும் ஒப்பற்ற பாத்திரமே சங்க இலக்கிய அகப்பாடல்கள் முழுதும் விரவி வியாதிருப்பதற்குக் காரணம் இவளன்றி ஒரு பாத்திரமும் சிறப்புப் பெறாது என்ற காரணத்தன்றி தத்தம் பண்பு நலன்களை இவளது கூற்றின் மூலம் விளக்கும் பாங்கால் தலைவியை விடத் தோழி சிறப்புப் பெறுகின்றாள். **'காதலர்கள், உணர்ச்சி மாந்தர்கள் உணர்ச்சியில் விளையும் அகப் போராட்டங்களையும் மோதல்களையும் உள்ளவாறு அறியும் அறிவுப் பாத்திரம் தோழி. காதலர் தம் உணர்ச்சி உள்ளங்களைப் பதப்படுத்தும் பண்பு பாத்திரம். வரம்பு கடந்து செல்லும் தலைவனை இடித்துரைத்தும், தனிமை தாங்காத தலைவியை ஆற்றியிருக்க அறிவுரை கூறியும், ஒளிவீசும் பாத்திரம். தலைவியின் உடல் வேறுபாட்டிற்கு கடவுட் காரணம் கற்பித்துக் கட்டுக்காணினும் வெறியெடுப்பினும் இம்மூட நம்பிக்கையை முறியடித்துக் காதற் காரணத்தை நிலைநாட்டி உண்மையைப் புலப்படுத்தும் புரட்சிப் பாத்திரம். மனக் கசப்பு தோன்றும் வேளையில் ஏற்ற அறிவுரையாற்றி தோழி தொண்டாற்றுகிறாள்''** என்பர். சோ.நா.கந்தசாமி

தோழியின் அறிவுத்திறன், சொல்லாற்றல்

தலைவியின் காதல் வாழ்வு வெற்றி பெறவும் அதை நிலை நிறுத்தவும் தன் அறிவையும், சொல்லாற்றலையும் கருவியாகக் சொள்கிறாள் தோழி. அதனால் தொல்காப்பியரும் அவளை அறிவுடையவளாகவே காட்டுகிறார். அவளுடைய சொல்லாற்றலையும் ''புரைதீர் கிளவி'' எனப் போற்றுகிறார். தோழி தனது சொல்லாற்றலால் தலைவன், தலைவி, தாயார் முதலானவர்களைத் தன் சொல்வழி ஒழுகச் செய்யும் திறன் பெற்றவளாகிறாள். அவள் பேசும் சொற்களில் கேட்டார்ப் பிணிக்கும் தகைமையும், திறந்தினிது சொல்லும் திறமும், வருந்தாமல் திருத்தும் பண்பும், குறிப்பாகப் புலப்படுத்தும் அறிவுக் கூர்மையும், தேவைப்படின் அஞ்சாமல் பேசும் நெஞ்சுரமும் அமைந்துள்ளன.

தோழியின் உளவியல்

தோழி - அறிவு நிலையில் உள்ளவள்

தலைவி, தலைவன் - காதலுணர்வு வயப்பட்டுத் தடுமாறும் தன்மையர்

செவிலி, நற்றாய் - குடும்ப மதிப்புணர்வுக்கு கட்டுப்பட்டவர்.

பரத்தை - வாய்ப்பை பயன்படுத்திக் கொள்பவள்.

தோழி

தலைவனின்	தலைவியின்
பண்பு, அழகு, செயல், வீரம், அன்பு ஆகியவற்றை தலைவிக்கு கூறுகிறாள்.	அழகு, பண்பு, சிறப்பு வேதனை ஆகியவற்றை தலைவனுக்கு கூறுகிறாள்.

நடுநிலையில் இருந்து தோழியானவள் பிராய்டு அவர்களின் கருத்துப்படி தன்முனைப்பு வலிமை பொருந்தியதாக இருப்பதே தனிமனிதனின் ஆளுமைக்கும், சமநிலைக்கும் ஏற்றதாக கருதப்படுகிறது என்கின்றார். இவ்வாறு தோழியானவளுடைய உளவியல் நோக்கோடு தலைவன், தலைவியிடம் சமநிலையில் நடந்து கொள்கிறாள்.

பண்பட்ட உள்ளத்தை பிராய்டு அவர்கள் கூறுகையில்

- இட்டின் தூண்டுதல்களை அடக்குதல்
- தன்முனைப்பினை அறிவுறுத்துதல்
- மேன்மை நிலைக்கு முயற்சி செய்தல்

போன்றவையும் எது சரி, தவறு என்று இம்மனம் தீர்மானிப்பது போல தோழியானவள் அவர்களுக்கு எது சரி, எது தவறு எனும் மனப்பாங்கில் நடந்து கொள்கிறாள்.

தோழியும் ப்ராய்டின் உளப்பகுப்பாய்வும்

இலக்கியக்கலை உலகிற்கு முதன் முதல் உளப்பகுப்பாய்வை அறிமுகப்படுத்தியவர் ‘சிக்மன்ட் ப்ராய்டு’ ஆவார். உளப்பகுப்பாய்வு கோட்பாடு என்பது ஆழ்மன உணர்வுகளை மனத்துள் புதைந்து கிடக்கும் விருப்பங்களை மும்மனச் செயல்பாடுகளின் வழி வெளிக்கொணரும் முறையாகும். பிராய்டின் மனச் செயல்பாடுகளை மனத்தின் ஆளுமை நிலையினைப்

- பண்படா உள்ளம் (or) இன்பமனம் (id)
- தன்முனைப்பு (Ego)
- பண்பட்ட உள்ளம், மேம்பாட்டுள்ளம் (Super ego)

என்று மூன்றாகப் பிரிக்கிறார்”. Calvin S.hall.

பிராய்டு கூறும்

- நனவு மனம் (Conscious Mind)
- நனவடங்கு மனம் (Sub conscious Mind)
- நனவிலி மனம் (Un Conscious Mind)

எனும் மூன்று பகுதிகளில் வலிமையும் உள்ளத்தின் பெரும் பகுதியையும் தன்னகத்துக் கொண்டது நனவிலி மனமாகும். இந்நனவிலி மனமே மனிதனின் பெரும்பாலான நடத்தையை நிறுவுகிறது. மேலும் பிராய்டு இன்பம் நாடும் மனநிலையையும் குறிப்பிடுகின்றார். இது இட்(னை) டினால் தூண்டப்படுகிறது. இது நனவிலி மனத்திலிருந்து செயல்படுகிறது என்கிறார் ப்ராய்டு. இந்த இட்டிலிருந்து வெளிப்படும் சக்தி தான் லிபிடோ என்ற பாலுணர்வாற்றலாகும். மனிதனது நடத்தைகள் அனைத்திற்கும் இப்பாலுணர்வாற்றலே காரணம் என்கிறார். மேலும் பிராய்டு "இன்பம் நாடும் மனநிலையினையும் இந்த லிபிடோவும் அதன் இயல்பும் பிறப்பால் அமைவன. பொதுவாக எல்லாச் சமூகங்களிலும் காமமே மிகவும் ஒடுக்கப்படுகிறது. இதனால் இது மனிதனிடம் இயல்பாக வெளிப்படாது. கனவு, பகற்கனவு, புறத்தெழு அகக்காட்சி, பின்னோட்டம் போன்ற பல வழிகளில் வெளிப்படுகிறது என்கிறாா"தா.ஏ. சண்முகம்.

தோழியானவள் தன்னுடைய பாலுணர்வை வெளிப்படுத்தாமல் தலைவன் தலைவியின் பாலுணர்வில் அதாவது களவு வாழ்க்கையில் இருந்து கற்பு வாழ்க்கைக்கு செல்வதற்கு அறவழியில் நின்று செயல்படுகின்றாள். பிராய்டின் கருத்துப்படி இன்பு இயல்பூக்கத்தை கட்டுப்படுத்துபவர்களாகவும், தன்முனைப்போடு செயல்படுகின்றாள். நனவிலி நிலையிலிருந்து செயல்பட்டு ஈ.கோ மீது ஆதிக்கம் செலுத்தி ஈகோவிலுள்ள குறைகளை எடுத்துக் கூறும் பண்பட்ட உள்ளத்தை போன்றும், தோழியானவள் தலைவன் தலைவியின் ஆசைகள், விருப்பங்களை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு தன்முனைப்போடு முயற்சி செய்கிறாள்.

உளவியலாளர் சுட்டிக்காட்டும் பண்பட்ட உள்ளத்தை தோழி செயல்படுத்தும் போது தலைவியுடன் சேர்ந்து தலைவன் செல்லுதலே சிறப்பும், பெருமையும் உடையது என்று கூறி தோழியின் சொல்லாற்றல் திறம்பட வெளிப்படுவது புலப்படுத்துகின்றன. பொருளீட்டும் எண்ணம் கொண்ட தலைவன் தலைவியைப் பிரியக் கருதித் தன் செயலுக்கு வடிகாலாக அவளுக்கு அதிக அன்பு காட்டிச் சரிசெய்யக் கண்ட தோழி அவள் மீது காட்டும் அதிக அன்பினை விடுத்து இல்லத்திலேயே அவளைப் பிரியாதிருப்பாயாக என அறிவுரை பகன்று நெறிப்படுத்துதலை அறியலாம்.இவ்வாறு சமகாலக்கட்டத்தில் இருப்பவர்களுக்கும் பண்பட்ட உள்ளத்தை பயன்படுத்துவதற்கும்,அறத்தொடு நிற்பதற்கும் நல்ல உதாரணமாக அமைவது எட்டுத்தொகை அகநூல்களில் உள்ள தோழியின் பாடல்கள் அமையும் என்பது புலனாகின்றன.

இயல் 5

வாயில்கள் வழி உளவியல்

வாழ்க்கை என்பது ஆராயப்பட வேண்டிய ஓா் அதிசயமல்ல அனுபவிக்க வேண்டிய ஓா் ஆனந்தமாகும். அத்தகைய வாழ்க்கையை நாம் அனுபவிப்பதற்கு உடலும் உள்ளமும் ஒத்திசைதல் வேண்டும். சங்க இலக்கியத்தில் இடம்பெற்ற காதல், மறம், புகழ் இயற்கை ஆகியவற்றை ஆராயப்பட்ட அளவிற்கு வாயில்கள் எவ்வாறு தலைவன், தலைவி, தோழி ஆகியோரிடம் உளவியல் ரீதியான கருத்துக்களை வெளிப்படுத்தினர் என்பதையும் உள்ள (மன) ரீதியாக எவ்வாறு செயல்பட்டனர் என்பதை ஆராய்வதாக இவ்வியல் அமைகின்றது.

வாயில்களாகத் தோன்றுபவா்களின் சிறப்பு

உயர்ந்த வாயில்களாக இருந்தாலும் ஒத்த வாயில்களாக இருந்தாலும் தாழ்ந்த வாயில்களாக இருந்தாலும் இவர்களெல்லாம் தலைவன் தலைவி என்றும் இருவரிடத்தும் அன்பு கொண்டு அவர்கள் சிறப்பாக வாழ்வதற்கு உதவுபவர்களாக விளங்கினர். இதனைத் தொல்காப்பியர்

"எல்லா வாயினும் இருவர் தேஎத்தும்

புல்லிய மகிழ்ச்சிப் பொருள் என்ப" என்ற நூற்பாவில் வெளிப்படுத்தியுள்ளார்.

வாயில்களாக இருப்பவர்களுடைய பேச்சு

வெளிப்படையாகப் பேசுதல் என்பது வாயில்களிடம் இருக்க வேண்டிய அடிப்படைப் பண்பாகும் என்பதனைத் இதனைத் தொல்காப்பியர்

வாயில் கிளவி வெளிப்படக் கிளத்தல்

என்னும் நூற்பாவில் கூறியுள்ளார். ஆனால் இந்நூற்பாவிற்கு உரையெழுதும் இளம்பூரணார் தாங்கள் சொல்ல வேண்டிய கருத்துக்களை குறிப்புச் சொல்லால் மறைத்துக் கூறினால் குற்றமென்ன என்ற வினாவை எழுப்பிக் கொண்டு வாயில்கள் குற்றேவல் முறைமை யாரதலானும் கேட்போர் பெரியோராதலானும் வெளிப்படையாக கூறாவிட்டால் பொருள் விளங்காமல் போனால் அவ்வாறு கூறினால் கூற்றிற்கு பயன் இன்மையானும் வெளிப்படவே கூறுவர் என்கின்றார் ஆசிரியர்.

வாயில்களாகத் தோன்றுபவர்கள் தலைவன் தலைவியிடத்தில் பேச வேண்டியவைகள் தலைவனிடம் சென்று தலைவியை பற்றி என்னவெல்லாம் பேச வேண்டும் என்பதை தொல்காப்பியர் கூறுகின்றார்.

- தலைவியின் கற்பு நெறி
- காமத்தைப் பற்றிய நல்லொழுக்கம்
- பொறுமை
- விருந்தினரைப் பேணும் பண்பு
- உறவினரைக் காக்கும் நிலை

முதலான பல நல்ல குணங்களைப் பற்றி பேசுதல் வேண்டும்.

செவிலித்தாயின் மனஏக்கம்

இலக்கிய மாந்தா்களில் உயா்ந்த நிலைக்குரிய பல பெயா்கள் இருப்பினும் **'தாய்'** என்ற உறவுக்கு அப்பெயா்கள் ஈடாகாது. சங்கத் தாய்மாா்கள் தன் குழந்தைக்கு அன்புக் காட்டுதல் மட்டுமின்றிப் பாலூட்டுகின்ற காலத்தே நற்பண்புகளையும், வீரத்தையும் ஊட்டி வளா்த்தனா். தொல்காப்பியரும் தாயன்பைப் பெரிதாக மதித்திருப்பதை அவருடைய நூற்பாவில் காணமுடிகின்றது. தலைவியானவள் நற்றாயுடன் அன்பு பூண்டு இருப்பதைக் காட்டிலும், தன்னுடைய செவிலித்தாயிடம் அன்பு பூண்டு இருப்பதை காணமுடிகின்றன.

"தாய்போல் கழறித் தழிஇக் கோடல்

ஆய்மனைக் கிழத்தியோடும் உரித்தென மொழிப

கவ்வொடு மயங்கிய காலையன" என்று கூறி விளக்குகிறார்.

"உளவியல் ரீதியாக நம்முடையது என்னும் எண்ணங்கள் செயல்களையும், சந்தர்ப்பங்களையும் அமைக்கக்கூடும். இந்த சக்தியானது நம் ஆழ்மனதிலுள்ள எண்ணங்கள் பௌதிக வடிவம் பெறும். அதிகம் எண்ணினால் மிக எளிதில் அவை உருவகம் பெறும். எண்ணங்களின் சக்தி, அதை திரும்பத்திரும்ப உச்சாடனம் செய்யும்பொழுது அதனுடன் நம் நம்பிக்கை, அன்பு, எதிர்பார்ப்பு போன்றவற்றை சேர்க்கும்போது இன்னும் வலுவடையும் என்கின்றார் எஸ்.சூரியமூர்த்தி அவர்கள்." சங்க இலக்கியத்தில் தலைவியின் ஆழ்மனதில் இருக்கும் எண்ணங்கள் இவ்வாறு நேர்மறைச் சூழ்நிலைகளை உருவாக்கி இருக்கின்றன என்பதை அறியமுடிகிறது. **"குழந்தைப் பருவத்தில் இருந்து ஏற்பட்ட அனுபவங்கள், அதிர்ச்சிகள், அடக்கிவைக்கப்பட்ட இச்சைகள், எண்ணங்கள் முற்றிலும் மறையாது. அது மனதில் எங்கோ மறைந்து கிடக்கும். மனதில் அப்பகுதி சுலபமாக வெளிப்படாது. அப்படி ஒரு பகுதி தான் அடிமனம் அதாவது ஆழ்மனம் என்கிறார் ப்ராய்டு."** தலைவனும், தலைவியுடைய ஆழ்மனதில் இருந்து வரக்கூடிய எண்ண உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர். அவ்வாறு வெளிப்படுத்துதல் காரணமாக வருவது உடன்போக்கு மூலமாக களவில் இருந்து கற்பு வாழ்க்கைக்கு செல்ல வேண்டும் என்று அடக்கி வைக்கப்பட்ட உணர்வானது வெளிக்கொணரப்படுகிறது என்பதை அறியலாம்.

சங்ககாலம் முதல் இக்காலக்கட்டம் வரை பெண்கள், ஆண்கள் இருவரிடையே ஏதாவது பூசல்கள், ஊடல்கள் வந்தால் அவற்றைத் தீர்த்து வைக்க தம் உடன் இருப்பவர்களை நாடுவது ஓர் இன்றியமையாத இயல்பாக இருந்ததை நம்மால் உணரமுடிகின்றன. அகஇலக்கியத்தில் வாயில்களாக வரக்கூடியவர்கள் முதன்மை கதாபாத்திராங்களாக இருக்கக்கூடிய தலைவன் தலைவி ஆகியோருடைய பிரச்சினைகளை உளவியல் ரீதியான முறையில் தீர்ப்பது போல இல்லறத்திலும் (குடும்பத்தில்) இருக்கக்கூடியவர்களுடைய பிரச்சினையை இல்லத்தில் உள்ள பெரியவர்கள் தீர்ப்பது சங்க அக இலக்கியத்தில் வாழ்ந்த மக்களுடைய எச்சங்களாகவே உள்ளன.

முடிவுரை

- **"எட்டுத்தொகை அகநூல்களில் குறுந்தொகை ஐங்குறுநூறு உளவியல் படைப்பாக்கம்"** என்னும் தலைப்பில் நிகழ்த்தப்பெற்ற இவ்வாய்வில் நான்கு இயல்களிலும் ஆராய்ந்து கண்டுணர்ந்த உண்மைகள் இடம் பெறுகின்றன.
- சங்க அக இலக்கியங்களில் தலைவி, தோழி, நற்றாய், செவிலி ஆகிய பெண்களின் ஒழுக்கத்தில் எந்தவிதக் குறைபாடுகளும் காட்டப்படாத நிலை இருப்பதைக் காணும் பொழுது பெண்களின் காம வேட்கையை ஆண்பாற் புலவர்கள் வெளிபடுத்தி இருந்தாலும், ஒருவரின் உணர்வை புரிந்து வெளிப்படுத்துவதாக அமைகிறதே தவிர, அவ்வுணர்வை தவறான கண்ணோட்டத்தில் வெளிப்படுத்தவில்லை. மேலும் ஆண்கள் பெண்கள் மீது வைத்திருக்கும் புரிதலை அறிய முடிகின்றன. குடும்பத்தைச் சுற்றி இருக்கக்கூடிய உறவுகள் அதனை சரி செய்து அவர்தம் உணர்வுகளைப் புரிந்து அறத்தோடு நின்று செயல்பட்டுள்ளனர் என்பதை அறியலாம்.

- சமகாலகட்டத்தில் இருக்கக்கூடிய ஆண்களும் பெண்களும் ஒவ்வொரு தனி மனிதனுடைய உணர்வுகளையும் புரிந்து நடந்தால் உள்ள முறிவு, நிலை மாற்றம், வேதனை ஆகியவற்றை சரி செய்தால் பல உளநோயிலிருந்தும் தன்னை தற்காத்துக் கொள்ளவும் முடியும். அது மட்டும் இன்றி குடும்பம் எனும் அமைப்பானது சீர்குலைந்து போகாமல் சிறப்பாக வாழவும் முடியும். ஆணுக்கு நிகர் பெண் சமம் என்று வாழ்ந்து கொண்டிருக்கும் சமகாலகட்டத்தில் குடும்பம் என்ற ஒரு அமைப்பே இன்றியமையாத ஒன்றாகும். அளவு கடந்த வேதனையையும், அளவு கடந்த மகிழ்ச்சியையும் எவ்வாறு நம் நனவிலி (அடிமனம்) அதாவது ஆழ்மனதை சமநிலைக்குள் வைத்துக் காக்க வேண்டும் என்பதை அறிவுறுத்தி இல்லற வாழ்வானது சிறக்க வழி காட்டுகின்றன.
- குடும்ப அமைப்புகளில் ஏற்படும் சிக்கல்கள் போராட்டங்களைத் தீர்க்க மன அமைதியும் நிம்மதியும் தேவை என்பதை உணர்த்துவதாக அமைகின்றன. அதுமட்டுமின்றி தலைவன் தலைவி ஆகியோரின் வாழ்க்கையில் அவர்களுக்கு பூசல்கள் ஏற்பட்டால் அதனைத் தீர்த்து வைக்கும் உறவுகளாக அறத்தோடு நிற்கும் தோழியும், உறவுகளைப் போல் வாயில்களும் அமைவது சமகால வாழ்க்கைக்கு ஒரு சிறந்த உதாரணமாக அமைகின்றன. கூட்டுக்குடும்ப வாழ்க்கைமுறை இன்றியமையாத ஒன்று என்பதை உணர முடிகின்றது.இதன்முலம் பாடல்கள் வழி மனதைக் கட்டுப்படுத்தி சமநிலைக்குள் வைத்து வாழ முற்பட வேண்டும் என்பதை உளவியல் ரீதியாகவும் அறிய முடிகின்றன.

எட்டுத்தொகை அகநூல்களில் குறுந்தொகை, ஐங்குறுநூறு உளவியல் படைப்பாக்கம் என்னும் இவ்வாய்வானது வாழ்க்கையை நன்குணர்ந்து வாழ நாட்டத்தை ஏற்படுத்தும்.சங்க இலக்கியத்தில் உளவியல் சார்ந்த சிந்தனைகளைக் கொண்டு பல ஆய்வுகளை மேற்கொள்ளப்படலாம்.

பரிந்துரைகள்

1. சங்க இலக்கியத்தில் அதீத மனம் ஓர் உளவியல் கூறுகள்
2. எட்டுத்தொகை அகநூல்களில் யுங்கின் உளவியல் கூறுகள்
3. ஐங்குறுநூற்றில் பரத்தமை ஒழுக்கம் ஓர் உளவியல் கூறுகள்
4. குறுந்தொகையில் சிற்றரசர்களின் உளவியல் கூறுகள்

ஆகிய தலைப்புகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படலாம்.

சங்க இலக்கியம் முதல் சமகால இலக்கியம் வரை இருக்கும் உளவியல் ரீதியான நூல்கள், ஆய்வேடுகள் ஆய்வு கட்டுரைகள், அகராதிகள், இணையதளங்கள் பின்னிணைப்பில் குறுந்தொகை ஐங்குறுநூற்றில் இடம்பெற்றுள்ள மரம், செடி, கொடி ஆகியவை அட்டவணைப்படுத்தப்படுகின்றன. உளவியல் ரீதியாக இருக்கும் கலைச்சொற்கள், உளவியல் ரீதியாக புகைப்படங்கள், சங்க இலக்கிய வாழ்க்கை முறைகள் ஆகியவை இடம் பெறுகின்றன.

வ.எண்	ஆய்வுக் கட்டுரைகள்	ஆய்விதழ்	ஆண்டு
1	ஐங்குறுநூற்றில் நனவிலி நிலையில் தோழியின் உளவியல். ஆய்வாளர்: ந.சுதா நெறியாளர்: முனைவர் ச.பிரியதர்சினி	தமிழ்மொழி மற்றும் இலக்கிய (பன்னாட்டு ஆய்விதழ்)	ஜீன் 2023
2	குறுந்தொகைத் திணைமரபில் இயற்கைப் பின்னணியும் ப்ராய்டின் உளவியல் கோட்பாடும் ஆய்வாளர்: ந.சுதா நெறியாளர்: முனைவர் ச.பிரியதர்சினி	தமிழ்மொழி மற்றும் இலக்கிய (பன்னாட்டு ஆய்விதழ்)	அக்டோபர் 2023

Avinashilingam Institute for HomeScience and Higher Education for Women (Deemed to be University Estd. u/s 3 of UGC Act 1956, Category 'A' by MHRD
Re-accredited with A++ Grade by NAAC. CGPA 3.65/4, Category I by UGC
Coimbatore - 641 043, Tamil Nadu, India

Appendix L2

(Item No 5 of Check List) Details of Research Publications

S. No	Article	Journal	Other Details Vol/No/Page No/ Year	Published in UGC CARE / Scopus Indexed/ Web of Science
1	ஐங்குறுநூற்றில் நனவிலி நிலையில் தோழியின் உளவியல் [The Psyche of Thozhi in the state of Nanveli Ainkurnooru]	தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் (International Journal Of Tamil Langoage and literary Studies	Volume-5 Special issue-2 June 2023 DOI : 10.5281/ zenodo. 8081696	UGC Approved Journal E-ISSN 2581-7140
2	குறுந்தொகைத் திணைமரபில் இயற்கை மனப்பதிவும் ப்ராய்டின் உளவியல் கோட்பாடும் [Nature in the Thinai Culture Of Kurnthogai and Freud's Theory Of Psychology]	தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் (International Journal Of Tamil Language and Literary Studies)	Volume-6 Special Issue-1 October-2023 DOI : 10.5281/zenodo 10122254	UGC care Approved Jouranal E-ISSN 2581-7140

*Proof of list of Journals from Internet to be attached along with copies of reprints.

Scholar :

Supervisor : 17.11.23

Checked By: 17/11/23

HoD/Dean of Respective School

The scholar Mrs. Sudha, N (20PHTMF004) has published her two research articles in the following UGC care listed journal:
1. International Journal of Tamil Language and Literary studies indexed and active in UGC care Gp. I from July 2020 to present.
This may be considered.
17.11.2023



ugccare.unipune.ac.in/Apps1/User/WebA/SearchList

SAVITRIBAI PHULE PUNE UNIVERSITY

Home

UGC

Search

UGC-CARE List

UGC-CARE List

You searched for "**tamil**". Total Journals : **15**

Search:

Sr.No.	Journal Title	Publisher	ISSN	E-ISSN	UGC-CARE coverage years	Details
1	Aavanam	Tamil Nadu Archaeological Society	NA	NA	from September-2019 to July- 2023	Discontinued from July 2023
2	Arimaa Nokku (print only)	Arimaa Nokku	2320-4842	NA	from April-2020 to Present	View
3	International Journal of Tamil Language and Literary Studies	Maheshwari Publishers	NA	2581-7140	from July-2020 to Present	View
4	International Research Journal of Tamil	IOR Press	NA	2582-1113	from January-2020 to January- 2023	Discontinued from Jan 2023
5	Journal of Tamil Studies	International Institute of Tamil Studies	0022-4855	NA	from April-2022 to Present	View
6	Kalachuvadu	Kalachuvadu Publications	0972-8260	NA	from April-2020 to Present	View
7	Manarkeni	Manarkeni Publications	2249-9164	NA	from July-2020 to Present	View

Copyright © 2023 Savitribai Phule Pune University. All rights reserved. | Disclaimer



ugccare.unipune.ac.in/Apps1/User/WebA/ViewDetails?JournalId=101002718&flag=Search

SAVITRIBAI PHULE PUNE UNIVERSITY

Home

UGC

Search

UGC-CARE List

Journal Details

Journal Title (in English Language)	International Journal of Tamil Language and Literary Studies
Journal Title (in Regional Language)	தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
Publication Language	English , Tamil
Publisher	Maheshwari Publishers
ISSN	NA
E-ISSN	2581-7140
Discipline	Arts and Humanities
Subject	Arts and Humanities (all) , Language
Focus Subject	Language and Linguistics , Literature and Literary Theory , Tamil
UGC-CARE coverage years	from July-2020 to Present

Copyright © 2023 Savitribai Phule Pune University. All rights reserved. | Disclaimer

International Journal of
Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal

E- ISSN - 2581 - 7140

UGC CARE Listed Journal From July 2020

Home | Manuscript Guidelines | Policies | Archives | Special Issue | Editorial Board | Contact Us

தொகுதி - 5, சிறப்பிதழ் - 2, ஜீன் 2023

Volume - 5 Special Issue - 2, June 2023

Articles 01- 32

Quick Links

- Home
- Manuscript Guidelines
- Policies
- Archives
- Special Issue
- Editorial Board
- Contact Us

பதிப்புரை

தமிழ்மொழி மற்றும் இலக்கியத்திற்காக எமது *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்* (Ijtlls) தம் இலக்கிய மற்றும் ஆராய்ச்சி அரும்பணியைச் செம்மையாகச் செய்து வருகின்றது. யு.ஜி.சி. கேர் (UGC CARE), எம்.எல்.ஏ (MLA) மற்றும் டி.ஓ.ஏ.ஜே (DOAJ) போன்ற ஆய்வுத் தளங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட எமது ஆய்விதழில் கௌரவ சிறப்பிதழ் ஆசிரியர்களாகப் பணியாற்றிட தன்னார்வம் கொண்ட பேராசிரியர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும், இச்சிறப்பிதழில் பெருமைமிகு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் ஆய்விதழ்களில் இருந்து பங்கு கொண்ட பேராசிரியர்கள் சிறந்த கட்டுரைகளை வழங்கியமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழர்கள் பெரும்பாலும் வாழ்க்கையின் ஒழுக்கம் மற்றும் நெறிமுறைகளில் கவனம் செலுத்தி வருபவர்கள். குடும்பம், சமூகம் மற்றும் கலாச்சாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்கள். செம்மொழிப் படைப்புகளின் கோட்பாடுகளின் அடிப்படையில் விமர்சனக் கட்டுரைகள் தமிழில் பெருமளவில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. ஆனால் அந்த படைப்புகள் மேற்கத்திய கண்ணோட்டத்தில் பெருமளவில் ஆராயப்படவில்லை. மேற்கு மற்றும் ஆசிய நாடுகள் தமிழ்மொழி மற்றும் இலக்கியத்தில் உள்ள அறிவை அறிய தமிழ்த்துறைகளையும் மற்றும் அமர்வுளையும் உருவாக்கி படிக்கின்றனர். எனவே, ***தமிழ் இலக்கியமும் மேற்கத்திய திறனாய்வுக் கோட்பாடுகளும்*** எனும் தலைப்பிலான கருத்தரங்கம் பாண்டியன் கல்வி அறக்கட்டளையின் சார்பாக இரண்டாம் பத்து நாள் சர்வதேச இணையவழி கருத்தரங்கமாக தமிழ்நாட்டில் முன்னெடுக்கப்பட்டது. இதுபோன்ற ஒரு

8. ஐங்குறுநூற்றில் நனவிலி நிலையில் தோழியின் உளவியல்

ந. சுதா & முனைவர் ச. பிரியதர்சினி

The Psyche of Thozhi in the State of Nanaveli in *Ainkurunooru*

N. Sudha & Dr. C. Priyadharshini

Abstract

The early history of Sangam is revealed through the book of Agapoorul "Eraiynar Kalaviyal Urai". The period of the book is before the 8th century. Tamil language and Tamil Literature portray the ancient Tamil people's antiquity and life. Sangam Literature is the base authority of ancient Tamil people and culture. Among the "Ettuthogai" books in Sangam Literature, Ainkurunuru speaks about the life of the Leader (Thalaivan) and the beloved (Thalaivi). Although it is short, it stands a virtual role in the subtlety of the subject and also explains the feeling of the lovers with the excellence of human feelings and emotions. The words used in "Ainkurunooru" mingle with our heart and also make us feel the state of joining with ancient people's feelings. Although psychological concepts are listed in the "Ainkurunooru", they are not explained what that is properly. Mostly, the Sangam literature and the chosen work "Ainkurunooru" speak of the psychological turmoil of the beloved when the Leader is absent from home for the sake of war or business. Very simple studies focussed on the psychological state of the beloved's friend (Thozhi). The article examines the state of mind of the beloved's friend (Thozhi) systematically with the psychological projections and regressions of the beloved that affect her psyche. Although there are main characters in "Ainkurunooru" like the leader and beloved, the main purpose of this article is to examine the psyche of the friend (Thozhi) with the evidence found in "Ainkurunooru".

Keywords: Psyche, Thozhi, State, Nanaveli, *Ainkurunooru*.

Download PDF

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Volume - 5, Special Issue - 2, June 2023
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

ஐங்குறுநூற்றில் நனவிலி நிலையில் தோழியின் உளவியல்

The Psyche of Thozhi in the State of Nanaveli in *Ainkurunooru*

ந. சுதா, தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 20PHTMF004, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
N. Sudha, Research Scholar of Tamil, Reg. No.: 20PHTMF004, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0001-5654-3336
முனைவர் ச. பிரியதர்சினி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
Dr. C. Priyadharshini, Assistant Professor of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0009-1121-5502
DOI: 10.5281/zenodo.8081696

Abstract

The early history of Sangam is revealed through the book of Agapoorul "Eraiyna Kalaviyal Urai". The period of the book is before the 8th century. Tamil language and Tamil Literature portray the ancient Tamil people's antiquity and life. Sangam Literature is the base authority of ancient Tamil people and culture. Among the "Ettuthogai" books of Sangam Literature, Ainkurunuru speaks about the life of the Leader (Thalaivan) and the beloved (Thalaivi). Although it is short, it stands a virtual role in the subtlety of the subject and also explains the feeling of the lovers with the excellence of human feelings and emotions. The words used in "Ainkurunooru" mingle with our heart and also make us feel the state of joining with ancient people's feelings. Although psychological concepts are listed in the "Ainkurunooru", they are not explained what that is properly. Mostly, the Sangam literature and the chosen work "Ainkurunooru" speak of the psychological turmoil of the beloved when the Leader is absent from home for the sake of war or business. Very simple studies focussed on the psychological state of the beloved's friend (Thozhi). The article examines the state of mind of the beloved's friend (Thozhi) systematically with the psychological projections and regressions of the beloved that affect her psyche. Although there are main characters in "Ainkurunooru" like the leader and beloved, the main purpose of this article is to examine the psyche of the friend (Thozhi) with the evidence found in "Ainkurunooru".

Keywords: Psyche, Thozhi, State, Nanaveli, *Ainkurunooru.*

ஆய்வுச் சுருக்கம்

சங்கத்தின் ஆதி வரலாறு "இறையனார் களவியல் உரை", என்னும் அகப்பொருள் நூலின் வழியாக வெளிப்படுகின்றது. அந்நூலின் காலம் 8ம் நூற்றாண்டிற்கு முந்தையதாகும். பண்டையக்காலத் தமிழ்க்குடியின் தொன்மையும் சிறப்பையும் கூறும் விதமாக அமைவ

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் 93
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 2, June 2023 Available at: www.ijtlls.com

தமிழ்மொழியும் அதன் இலக்கியமுமாகும். பழங்காலத் தமிழ்மக்கள் வாழ்ந்த வரலாற்றிற்கு மூலமாக விளங்குவது சங்க இலக்கியமாகும். சங்க இலக்கியங்களில் உள்ள எட்டுத் தொகையில் ஒன்றாக ஒளி வீசக் கூடியது ஐங்குறுநூறு. இது அடியில் குறுகியது என்றாலும் பொருள் நயத்தாலும் அதனை விளக்கும் உணர்வுகளாலும் உரை சிறப்பாலும் மிகவும் உயர்ந்து நிற்பதாகும். ஐங்குறுநூற்றில் உள்ள செய்யுள்கள் ஒவ்வொன்றும் உணரும் போது நம் உள்ளத்தில் ஒவியங்களாக விரிந்து அந்த கால மாந்தர்களுடன் ஒன்று கலக்கச் செய்யும் சொற்சித்திரங்களாகும். உளவியல் சார்ந்த கருத்துக்கள் ஐங்குறுநூற்றில் இடம் பெற்றிருப்பினும் அவை என்னென்ன இருக்கின்றன என்று எடுத்துக் கூறப்படவில்லை. ஐங்குறுநூற்றில் தலைவன், தலைவி என்ற முக்கிய கதாபாத்திரங்கள் இருந்தாலும் தோழியின் உளவியல் என்ன என்பதை முறைப்படி உளவியல் நோய்க்குறிகளோடு ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

கலைச் சொற்கள்: *ஐங்குறுநூறு*. நனவிலி, நிலை, தோழி, உளவியல்.

முன்னுரை

அகத்திணை மாந்தர்களுள் தோழிக்கென தனிச்சிறப்பிடம் உண்டு. தோழியின் கூற்று எதிலும் அவளது தனிப்பட்ட வாழ்க்கையோ, பிற அக மாந்தர்களுடன் தொடர்பு கொள்ளாமல் அவளுக்கெனத் தோன்றும் தனிப்பட்ட மன உணர்வுகளோ சித்தரிக்கப்படவில்லை. நற்றாய், செவிலி போன்றோருடன் தொடர்பு கொள்ளாமல் அவளுக்கென தோன்றும் தனிப்பட்ட மன உணர்வுகளைத் துவக்கமாக எடுத்துக் காட்டியும், அவர் தம் மனப்போராட்டங்களுக்கு உளவியல் வழிதீர்வு காணவும் படைக்கப்பட்ட படைப்பாகவே தோழியானவள் தோன்றுகிறாள். தலைவன், தலைவி இருவருக்குமிடையே உள்ள அன்பை வெளிக்கொணரச் செய்வதும் தலைவனின் ஒழுக்கங்களை எடுத்துக் கூறுவதும், தலைவியின் துன்பத்தை போக்குவதுமாகவும், தோழியின் கூற்றில் புலனாகிறது என்பதைக் கூறுவதாக இக்கட்டுரையானது அமைகிறது.

சங்க இலக்கியம்

சங்கம் என்பது சேர்க்கை என்று பொருள்படுவதோர் வடச்சொல். ஆகவே புலவர் சங்கமென்பதை 'புலவர் குழாம்' எனப் பொருள்படும் என்கின்றனர். சங்க இலக்கியங்கள் தொகையும், பாட்டும் ஆகும். தொகை நூல்கள் எட்டு வகைப்படும். அவை *நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு* ஆகியவை ஆகும். இவற்றுள் *நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை,*

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 2, June 2023 Available at: www.ijtlls.com

அகநானூறு ஆகிய ஐந்தும் அகப்பொருள் குறித்தன. புறநானூறு, பதிற்றுப்பத்து புறப்பொருள் குறித்தன. *பரிபாடல்* அகமும், புறமும் விரவி காணப்படும் அகபுறநூலாகும்.

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஒங்கு பரிபாடல்
கற்றறிந்தோர் ஏத்தும் கலியோடு அகம்புறம் என
இத்திறத்து எட்டுத்தொகை (தமிழ் இலக்கியத் தகவல் களஞ்சியம், பக். 36)

என்ற பழம்பாடல்கள் எட்டுத்தொகை நூல்களைப் பற்றிக் கூறுகிறது.

சங்க இலக்கிய அகப்பாடலுக்கே உரிய சிறப்பு **சுட்டி ஒருவருடைய பெயர் கூறப்படமாட்டாது** என்பதே ஆகும். இதில் தலைவன், தலைவி பெயர் குறிப்பிடமாட்டாது.

மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்
சுட்டி ஒருவர் பெயர்கொளாப் பெறஅர் (தொல். பொருள்., நூ. 57)

அகப்பாடல்கள் அனைத்தும் தலைவி, தலைவர் வாழும் வரை வாழும் பாடல்கள் ஆகும்.

சங்கநூல்கள் காட்டும் வாழ்க்கை

தாய்வழி சமுதாய வாழ்க்கையில் இருந்து குழு வாழ்க்கைக்கு வளர்ச்சி அடைந்த பழந்தமிழர் முடியாட்சி காலத்தில் சிறந்த நாகரிகம், பண்பாடு பெற்ற மக்களாக வாழ்ந்து இருக்கின்றார்கள் கால வளர்ச்சியில் பிற்காலத்தில் பறத்தையர் ஒழுக்கம் மது, புலால் உண்ணுதல் போன்றவை கூறப் பெற்றாலும் அக, புற வாழ்க்கைக்கு சில நெறிகளை வகுத்துக் கொண்டு வாழ்ந்து இருக்கின்றார்கள். தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் விளக்கும் கோட்பாடுகள் சங்க இலக்கியங்களில் பெரும்பாலும் அப்படியே காணப் பெறுகின்றன என்கின்றார் சுபாஷ் சந்திரபோஸ்.

அகவாழ்க்கையின் பெருமை

பல்வேறு குண நலங்களை ஒத்த தலைவனும் தலைவியும் களவு வாழ்க்கையில் கூடி மகிழும் போதும், கற்பு வாழ்க்கையில் சேர்ந்து வாழும் போதும், நாணயத்தின் இருபக்கங்களாக இரண்டறக் கலந்து வாழ்வதை அறிய முடிகிறது. தலைவியின் பால்மிக்க காதல் கொண்டு இருக்கும் தலைமகன் அவளோடு சேர்ந்து வாழ்வதையே பெரும் பேறாக கருதுகின்றான். அவளைப் பிரிவதற்கு பரிசாக வானைவிட உயர்ந்த அளவிற்கு எதைக் கொடுத்தாலும் பெற்றுக்கொள்ள மாட்டேன் என்றுக் கூறும் போது தலைவனின் அன்பின் ஆழத்தை அறிந்து கொள்ள முடிகின்றது.

முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிரும் கூந்தல் வயங்கிழை ஒத்த
வாரேன் வாழிய நெஞ்சே (பட்டினப்பாலை, பா. 218 - 220)

என்ற பாடல் மூலம் அறியலாம்.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Volume - 5, Special Issue - 2, June 2023
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

உளவியல் விளக்கம்

மனிதனின் எண்ணத்திற்கு தோற்றுவாயிலாக அமைந்து இருப்பது மனம். மனித மனம் உள்ளம் பற்றிய அறிவியல் ஆராய்ச்சியை உளவியல் என்பர். உளவியல் மனித நடத்தை ஆராயும் ஓர் அறிவியல் துறையாகும். **நடத்தை மற்றும் அனுபவத்தை அறிவியல் முறையில் ஆராய்வதாகும்** என வரையறுப்பார் ஃப்ராய்டு.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல திருப்புமுனைகளை அறிவியல் உலகம் கண்டிருக்கிறது. அவற்றில் மிகவும் முக்கியமானது ஃப்ராய்டின் உளப்பகுப்பாய்வும் ஒன்று. உளப்பகுப்பாய்வு என்கிற சொல்லை உளவியலுக்கும் அறிவியலுக்கும் அறிமுகப்படுத்தியவர் ஃப்ராய்டு ஆவார். நரம்பு நோய்க்கு ஃப்ராய்டு கண்டுபிடித்த புதிய மருத்துவமுறையே உளப்பகுப்பு மருத்துவமுறை என்கிறார் ஃப்ராய்டு.

> **தாக்கமும் தூண்டுதலும் சாதாரண செயல்கள் அல்ல. அவரவர் மனநிலையைப் பொறுத்து இவ்விரண்டும் விளைவுகளை ஏற்படுத்தவல்லவை. நடத்தை ஓர் உயிரியின் பல நிலைப்பட்ட துலங்களைக் (Responses) குறிக்கும் சொல்லாகும். இத்துலங்கல் தூண்டல்களினால் ஏற்படும் விளைவாகும் என்ற உளவியல் பற்றிய கருத்தும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. (*சிக்மண்ட் ஃப்ராய்டு – உளப்பகுப்பாய்வு அறிவியல்*, ப. 60)**

மனித உள்ளம், உள்ளத்தை தன்னகத்தே கொண்ட உடல், இவ்வுடலில் தோன்றும் உணர்வுகள் அவ்வணர்ச்சிகளின் வெளிப்பாடாக அல்லது வடிகாலாகத் திகழும் நடத்தை ஆகியவற்றை உள்ளடக்கியது உளவியல்" எனக் கூறலாம்.உளநோயிலைப்போல தனிப்பிரிவாகவே இயங்கி வருகின்ற உளப்பகுப்பாய்வை **'நனவிலியின் அறிவியல்'** என்று தான் ஃப்ராய்டு கூறுகிறார்.

மனமும் உடலும்

மனத்தைத் தனியாகவோ உடலைத் தனியாகவோ பிரிக்க முடியாது.மனம் உடலையும் உடல் மனத்தையும் சார்ந்து இயங்குவன அவை சேர்ந்தே வளர்கின்றன. "மனம் என்ற சொல்லுக்கு அதே பொருளில் உள்ளம், நெஞ்சம், அகம், எனப் பல சொற்கள் உள்ளன. 'மன்' என்ற அடிச்சொல் இருந்து இது தோன்றியது எனக் கொள்ளலாம். 'மன்' என்பது 'நிலைபேறு' எனக் குறிப்புப் பொருளைக் கொண்டது." எனத் தமிழ் பேரகராதி கூறுகின்றது.

> **மனமானது புலனுணர்ச்சி உணர்வு எண்ணங்கள் போன்ற அனுபவங்களை பெறும் கருவியாக விளங்குகிறது. ஒரு சாதாரண மனிதன் எதைப் புரிந்து கொள்கிறானோ அதுவே தற்கால உளவியல் நூல்களால் குறிக்கப்படும். மனம் (psyche) ஆகும். (சமாதான சரோசாதேவி, ப.114)**

என ஜி.டி.போவாஸ் கூறுகிறார். மனம் என்பதை ஆறாவது அறிவு எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். மனித உள்ளத்தின் உணர்வே எல்லா அறிவியல்களுக்கும் கலைகளுக்கும் கருவறையாக விளங்குவது எனவே அத்தகைய உள்ளத்தின் வழிமுறைகளை ஆராய்கின்ற

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் 96
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Volume - 5, Special Issue - 2, June 2023
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

உளவியல் இலக்கியம் பற்றிய ஆராய்ச்சிக்கும் ஏற்புடையதாக இருக்க முடியும். (இ.எஸ்.டி (தொ.ஆ) இலக்கிய இசங்கள்.ப. 12)

உணர்ச்சிக் கோட்பாடுகள்

ப்ராய்டின் உணர்ச்சிக் கோட்பாடுகள் தற்காப்பு உணர்ச்சிகள், இனப்பெருக்க உணர்ச்சிகள் என்ற இருமைவாத அடிப்படையிலானவை.

கொள்கைகள்

இன்பக் கொள்கை **மெய்மைக் கொள்கை**
↓ ↓
இயற்கை வழிப்பட்டது செயற்கை வழிப்பட்டது

மெய்மைக் கொள்கையை விளக்கும் போது, ஏற்படுகின்ற உணர்ச்சி மனிதனை முழுமையாக ஆக்கிரமிக்கும் போக்கினால் இன்பக் கொள்கையும் அது பாதிக்கச் செய்கிறது என்று கூறுகின்றனர். மேலும், உணர்ச்சி, மெய்ப்பாடு, நடத்தை விளையாட்டு, கலை, பேச்சு, மௌனம் ஆகிய உடல் செயல்பாடுகளின் வழி நின்று உள்ளத்தை அறியலாம்.

உளம் சார்ந்த உளவியல்

அஃறிணை **உயர்திணை**
↓ ↓
பறவை **மனிதன்**
↓ ↓
விலங்கு **ஆண்** **பெண்**
↓ ↓
தலைவன் **தலைவி**
↓ ↓
பாங்கன் **தோழி**
↓
செவிலி, நற்றாய்

இலக்கிய திறனாய்வில் உளவியலின் பங்களிப்பு

இலக்கியத்திறனாய்வில் உளவியலின் பங்களிப்பு ஆறு நிலைகளில் உள்ளது என்று கூறும் தி. சு. நடராஜன், அவற்றை பின்வருமாறு குறிப்பிடுகிறார். இலக்கியப் படைப்பாக்கத்தின் அல்லது அது தோற்றம் பெறுவதின் வழிமுறைகளை உளவியல் நிலையில் புலப்படுத்துதல்.

- **படைப்பாளியின் உள்ளத்து நிலையையும் அதற்குரிய காரணங்களையும் அறியக்கொண்டு வருதல். அதாவது படைப்பாளியின் சுயவரலாற்றைப் படைப்பில் காணுதல்.**
- **குறிப்பிட்ட இலக்கியத்தில் காணப்பெறுகின்ற கதைமாந்தர்களின் உணர்வுகளையும் செயல்களையும் விளக்குதல்.**

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ் 97
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 2, June 2023 Available at: www.ijtlls.com

- **இலக்கியத்தில் தொல்படிமம் முக்கிய இடம் பெறுகிறது என்பதைக் கருதுகோளாகக் கொண்டு அதன் உருவாக்கத்தைப் புலப்படுத்துதல்.**
- **குறிப்பிட்ட இலக்கியப் படைப்பிலுள்ள தனிச்சிறப்பான சொற்களையும் தொடர்களையும் மற்றும் சிறப்பான உத்திமுறைகளையும் உள்ளத்து உணர்வுப் பிரதிபலிப்புக்களாக இனங்கண்டு விளக்குதல்.**
- **வாசகரிடம், இலக்கியம் ஏற்படுத்துகிற உறவையும் தாக்கத்தையும் காணுதல். (நித்தியா, பா, ப. 81)**

உடல் சார்ந்த உளவியல் உணர்ச்சிகள்

***மெய்பாடு, *நடத்தை, *விளையாட்டு, *கலை, * பேச்சு, *மௌனம்**

ஃப்ராய்ட் உளப்பகுப்பாய்வில் உள்ளம் இல்லாத உளவியல் என்பதே முக்கியமானது. உள்ளம் என்ற அருவப் பொருளை புரிந்து கொள்ள அகத்தாய்வே துணை நிற்கும். இத்தகைய அனுபவ மெய்மைகளைக் கொண்டு கட்டமைக்கப்பட்ட கருத்துருவாக்கங்கள் உள்ளத்தைப் புரிந்து கொள்ள ஏதுவாகின்றன. கருவிகளற்ற ஊடகங்களின் மூலம் புரிந்து கொள்ளலாம். இதற்காக இவர் ஏற்படுத்திய உளமாதிரியே உளப்பகுப்பாய்வு ஊடக உளவியலாகும். இதனையே மூன்று கோணங்களாக உருவாக்கியுள்ளார். இதன்படி தளவரைவு, பகிர்வு அல்லது சிக்கனம், இயக்காற்றல் ஆகிய முக்கோணத்தின் மூலம் உள்ளத்தைக் காண முற்படுகின்றார்.

மனம் குறித்து திருவள்ளவர்

மனநலம் மண்ணுயிர் காக்கும் இனநலம்
எல்லாப் புகழும் தரும். (திருக்குறள், 457)

மூவகை மனதை ஃப்ராய்டு அவர்கள் குறிப்பிடுகையில்,

*** மேல்மனம் (Conscious Mind)**
*** இடைமனம் (Subconscious Mind)**
*** அடிமனம் (Unconscious Mind)** (***சிக்மண்ட் ஃப்ராய்டு – உளப்பகுப்பாய்வு அறிவியல்***)

அடிமனம்

'மேல் மனம்' என்பது நீரின் மேல் மிதந்து கொண்டிருக்கும் பனிக்கட்டியென்றும், அடியில் உள்ள நீர் எவ்வாறு முக்கியமோ அதுப்போன்றுதான் மேல்மனதை தாங்கிக்கொண்டிருக்கும் அடிமனமாகும் என்ற உண்மையை ஃப்ராய்டு கண்டார்.

அடிமனம் மனதின் அறியாத மனநிலையாகும். மூ.இராசமாணிக்கம் தம்நூலில் அடிமனதைப் பற்றிய பலகருத்துகளைத் தொகுத்துக் கூறியுள்ளார். அவை,

> **அடிமனதை மனமறியாத நிலை என்றும் அறிவு மயக்க நிலை என்றும் கூறலாம். உறங்க வைக்கும் முறையின் மூலம் நோயாளிகளின் மனக்கோளாறுகளை போக்கி வந்த ஃப்ராய்டு கண்ட உண்மை இந்த அடிமனநிலையாகும்.**

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal

E-ISSN: 2581-7140
Volume - 5, Special Issue - 2, June 2023
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

> **நனவிலி மனதில் வேதனை, மகிழ்வு, ஏக்கம், ஏமாற்றம், ஆணவம், பயம், வெறுப்பு, பழிவாங்கும் உணர்வு ஆகியவை புதைந்து கிடக்கும் என்பதைக் கூறுவதாக அமைகின்றது. (மூ. இராமாணிக்கம்)**

என்றும் அடிமனதிற்குரிய விளக்கத்தை மூ. இராமாணிக்கம் குறிப்பிடுகிறார்.

சங்க இலக்கியத் தொகை நூல்களில் ஐங்குறுநூறு பெறும் இடம்

சங்கப்புலவர்களால் இயற்றப்பட்டுச் சான்றோரால் தொகைச் செய்யப்பட்ட எட்டுத்தொகை நூல்களுள் மூன்றாவதாக அமைந்தது. ஐங்குறுநூறு. முல்லை முதலிய ஐந்திணையொழுகலாறுகளை நற்றிணை முதலியவற்றிலுள்ள செய்யுட்களை விட அடியளவில் குறைந்த நூறுநூறு பாக்களால் தனித்தனியே விளக்குவதால் ஐங்குறுநூறு என்று பெயர் பெற்றது. இந்நூற் செய்யுட்களின் சிற்றெல்லை மூன்றடிகள், பேரெல்லை ஆறு அடிகளாகும். மூன்றடி கொண்ட அகவல்களைத் தன்பால் கொண்ட சங்கநூல் இதொன்றே. இந்நூற்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். இவ்வாழ்த்துச் சிவபெருமானுக்குரியதாகும். நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழார் என்பதும், தொகுப்பித்தவர் யானை கட்சேய் மாந்தரஞ் சேரளிரும் பொறை என்பதும் நமக்கு கிடைக்கும் சான்றாகும்.

சங்க இலக்கியத்தில் தோழி

தோழி அக இலக்கியங்களில் முக்கோண வடிவத்தின் மேல்முனையாக விளங்குகிறாள். அவள் தலைவன், தலைவி என்ற இருவரையும் இணைக்கும் பாலமாகச் செயல்படுகிறாள்.

தோழி தானே செவிலி மகளே என்பது *தொல்காப்பியம்* நமக்குத் தரும் குறிப்பாகும். இதை தவிர தோழியின் பிறப்பு, திருமணம், வாழ்க்கை குறித்து வேறெந்தச் செய்தியும் அறிய முடியவில்லை. அவள் தலைவிக்காகவே, தலைவியின் காதல் வெற்றிக்காகவே படைக்கப்பட்ட பாத்திரமாக காணப்படுகிறாள். தலைவியின் விளையாட்டுப் பருவத்திலிருந்து தலைவி மகப்பேறு பெற்ற நிலையில் செவிலியாக மாறும் வரை தன் தலைவிக்காகவே அவள் வாழ்கிறாள். அகத்துறையின் தோழியர், ஆயத்தார் என்பவர்கள் தலைவிக்குத் துணையாக இருக்கின்றனர். தோழியரே பின்னால் "செவிலியர்" என்ற நிலையை அடைகின்றனர். தோழியை "**நன்னர் மாக்கள்**" என்று அகம் கூறுவதாக முனைவர் வி.சி. சசிவல்லி அவர்கள் கூறுகிறார்.

தலைவியுடன் சிறப்போடு இருந்த துணைப்பாத்திரத்தைச் சுட்ட **தோழி, இகுளை, பாங்கி, சிலத், இணங்கி, துணைவி, சேடி, சகி** என்ற சொற்கள் பல்வேறு காலநிலையில் தோன்றி வழக்கில் இருந்து வந்திருக்கின்றன. இவற்றில் தோழி என்ற சொல்லே பழமைச் சிறப்புடையது. தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், வீரசோழியம் முதலிய இலக்கண நூல்களிலும் சங்க இலக்கியங்களிலும் பயின்று வந்த பெருமையுடையது என்றே கூறலாம்.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies

E-ISSN: 2581-7140
Volume - 5, Special Issue - 2, June 2023

UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

உணர்வு விளக்கம்

கற்போர் கதை மாந்தர்களின் உணர்வினை முடிந்த வழிகளிலெல்லாம் முழுமையாகப் பெற்றிட வேண்டுமென்ற புலவர்களின் விருப்பமே பழம்நம்பிக்கைகளை இலக்கியத்தில் கையாளச் செய்கிறது. ஓவியனின் பின்னணியைப் போல இந்நிகழ்ச்சிகள் உணர்வின் பின்னணிகள் எனலாம். பொருந்தாதவைகளும் சங்க இலக்கியத்தில் தலைவி, தோழி, தலைவனின் உணர்வை விளக்க வந்ததையேயன்றி உண்மையை விளக்கவந்தவைகள் இல்லை. சங்க இலக்கியத்தில் இடம்பெறும் அகமாந்தர்கள் தோழி, தலைவி, தலைவன், தாய், செவிலி, பரத்தை, வாயில்கள் என்போராவர். இவர்கள் கூற்றாலும், கூற்றை முன்னிலைப்படுத்தும் முறையாலும் கூற வேண்டிய இடத்தில் கூறாமல் அதை மனதிற் கொள்ளும் பாங்காலும் செய்யுளில் தங்கள் மனநிலையினை உணர்த்தி நிற்கின்றனர். செய்யுள்களில் அக மாந்தர்களின் மனவுணர்வுகள் கூறுவோரின் மனநிலைக்கு ஏற்ப, பின்புலங்களின் தன்மைக்கேற்ப, கூறுவோர் உள்ளுறை, இறைச்சிகளைப் பயன்படுத்தி குறிப்பாகவோ, உவமைகளைப் பயன்படுத்தி விளக்கமாகவோ, நேர்முகச் சொற்களைப் பயன்படுத்தி வெளிப்படையாகவோ தம் மன உணர்வினை வெளிப்படுத்துகின்றனர். சங்க கால மாந்தரில் தோழி, மனவியல் கூற்றினைப் பல்வேறு இடங்களில் கையாண்டிருக்கிறாள்.

- **குறை வேண்டியவனை விலக்குதல்**
- **தலைவன் சிறைப்புறத்தனமாக தோழி**
- **அறத்தோடு நிற்றல்**
- **தலைவன் தோழியின் துணை நாடுதல்**
- **தோழி நகைபாடுதல்**
- **வாயில் நேர்தல்**
- **வாயில் மறுத்தல்**

இவ்வாறு உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன. (முனைவர் லீ. பெலிண்டா & புனிதா சுப்பிரமணியம், ப. 293)

தோழியின் ஆளுமை

உளநூலார் ஆளுமையின் அடிப்படையில் அகமுகத்தினர் என்றும் (**Interovert**) புறமுகத்தினர் (**Extrovert**) என்றும் மக்களை இருவகையாகப் பிரிப்பர். புறமுகத்தினரின் முக்கிய பண்புகளில் சில தோழியுடன் பொருந்தியவாறு அமையலாம்.

- **சூழ்நிலைக்கு ஏற்றபடி விழிப்பாக இருக்கின்றவளாக காட்டப்படுகின்றாள். (தோழி, சூழ்நிலைக்கேற்றவாறு பகல் இரவுக்குறிகளை அமைக்கிறாள்).**
- **அனைவருடனும் எளிதாகப் பழகும் தன்மையையும் பெற்றவளாக காட்டப்படுகிறாள். (அவள் தலைவி, தலைவன், செவிலி முதலியோருடன் எளிதாகப் பழகுகிறாள்)**

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Volume - 5, Special Issue - 2, June 2023
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

- செயல் துடிப்புடன் இருத்தல் (தோழியானவள் குறியிடத் துய்த்தல் முதற் கொண்டு பள்ளியிடத்துய்த்தல் வரை சிறப்பாகச் செயல்படுகிறாள்)
- மாறுதல்களை விரும்புதல் (தன் எண்ணம் நிறைவேறாத சமயத்தில் அறத்தோடு நிற்றல், உடன்போக்கு ஆகிய மாற்றங்களை அமைக்கிறாள்)
- எந்த நிலைக்கும், தன்னை சரிக்கட்டிக் கொள்ளுமாறு சங்க இலக்கிய புலவர்கள் தோழியைக் காட்டுகிறார்கள். (குறை நயத்தலின் தலைவனை புகழும் அவள் பரத்தையிற் பிரிவில் அவனைக் கடிகிறாள். வாயில் மறுக்கிறாள்)
- தன் உணர்ச்சிகளைப் பிறர்க்கும் புலப்படுத்துதல் (தோழி வரைவு கூந்தலில் தன் உணர்ச்சிகளை நேர்முகமாகவும், சிறைப்புறமாகவும் தலைவனுக்கும் புலப்படுத்துகிறாள்)
- அனைவருடனும் தோழி கலகலப்பாக பேசுபவளாக காட்டப்படுகிறாள். (பிறரை விட தோழியின் கூற்று தான் அகத்துறையில் அதிகம்)
- மாறுபட்ட பாலினருடன் சுமூகமாகப் பழகுதல் (தலைவனுடன் பழகுதல்)
- பொதுவாக உற்சாகமாக இருத்தல். (தோழி எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் உற்சாகத்துடன் செயலாற்றுகிறாள்)

எனவே ஆளுமையின் அடிப்படையில் தோழியை புறமுகத்தினளாக வகைப்படுத்தலாம்.

தோழியின் மன உளைச்சல்களின் வெளிப்பாடு

தோழியானவள் தன் தலைவியையும் அவனது தலைவனையும் எண்ணி எண்ணியே தன் மனதை நோய்க்குள்ளாக்கின்றாள் என்று அறிந்து அதனால் தான் மனம் படும்பாடு ஒரு புறமாக இருந்தாலும் தோழி வற்புறுத்த பத்தில் தலைவியின் துயரை போக்கும் வண்ணமாக ஆற்றுவித்தல் என்ற பொருளில் அமைகிறது.

மனமுறிவு

மனமுறிவு என்பது செயலை செய்ய விடாமல் தடுத்தல் அல்லது செய்யாத நிலை ஏற்படும் மனநிலைமையாகும் என வரையறை செய்கின்றார் பேராசிரியர் கி. நாகராஜன் அவர்கள்.

தோழியின் மனமுறிவு பொதுமையாக்க நிலையில் குறைக்கப்படுகின்றது. இதை மக்கள் துன்பத்தில் இருந்து தங்களையும் மற்றவர்களையும் பாதுகாத்துக் கொள்ள துன்ப நிகழ்வுகளைப் பற்றி பேசும் போது பொதுப்படையாகவே பேசுவார்கள். குறிப்பாக ஒன்றை பற்றி பேச மாட்டார்கள் என்கிறார் ராபார்ட்.

மாமழை இடியூஉத் தளிசொரிந் தன்றே
வாள்நுதல் பசப்பத் செலவு அயர்ந் தனைய (ஐங்குறுநூறு, பா. 423)
புறவு அணி நாடன் காதல் மடமகள்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Volume - 5, Special Issue - 2, June 2023
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

போது அவிழ் தாமரை அன்னநின்

காதல்அம் புதல்வன் அழும், இனி முலைக்க. (ஐங்குறுநூறு, பா. 424)

தலைவன், சொன்ன காலமும் வந்துவிட்டது. ஆனால் தலைவன் மட்டும் வரவில்லை. தலைவன் வருவதாக சொல்லி வராமல் இருக்கக் கூடிய குறையை தோழி வெளிப்படுத்தும் பொழுது, நேரடியாக கூறினால் கேட்போரின் துன்பத்தை மிகுதிப்படுத்தும் என்பதை உணர்ந்த தோழி பொதுமைப்படுத்தி புதல்வனை சுட்டிக் காட்டி தன் உணர்வை வெளிப்படுத்தியுள்ளாள்.

நனவிலி மனதில் இருக்கக்கூடிய ஏக்கம் இதில் வெளிப்படுவதை அறியமுடிகிறது.

தோழி கடிந்துரைத்தல்

தலைவன் பொருட்டு நீர் தூதுவனாக வருகின்றாய். அவர் வீரத்தை பலர் அறியும் வண்ணம் உள்ளது. ஆனால் தலைவியிடம் கூறிய சொல்லை மட்டும் காப்பாற்றவில்லை. தலைவியானவள் பசலை நோய்க்கு ஆட்பட்டு உள்ளாள். நீர் சென்று சொல்வாயாக என்று தோழி கடிந்து கூறுகின்றாள். பாணனிடம்,

எல்வளை நெகிழ, மேனி வாடப்

துறந்தோன் மன்ற, மறம்கெழு குருசில்

இன்னும் வருதி, என்அவர் தகவே? (ஐங்குறுநூறு, பா. 471)

படைப்பாளி நோயாளியாக தான் இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. உளநோய் மருத்துவராக கூட இருக்கலாம். தன்னைப் பாதித்த நிகழ்வுகளை அல்லது தான் கண்ட நிகழ்வுகளை உற்றுநோக்கி அதன் மூலம் இவ்வகையில் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஆசிரியரால் உருவாக்கப்பட்ட படைப்பாக கூட இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

தொகுப்புரை

தோழிக்கெனத் தனிச்சிறப்பிடம் அகப்பாடல்களில் உண்டு. தலைவி தலைவனுக்காக தன்னையே நோய்க்குள்ளாக்கி வருந்துவதும் தலைவிக்காகவே வாழும் குறிக்கோளை கொண்டவளாகவும் தோழி தான் என்பதை ஐங்குறுநூற்றின் தோழியின் பாடல்கள் நிறுவுகின்றன. தலைவனை கருப்பொருட்களோடு ஒப்பிட்டு வெளியுலக அனுபவங்களை ஏற்றிக் கூறும் பாடல்கள் தோழி கூற்றில் மிகுதியாக காணப்படுகிறது. தோழியின் நனவிலியானது இப்பகுதியை முழுமையானதாக கையாளுகிறது.நனவிலியில் இருக்கக்கூடிய அனைத்தும் தோழியின் கூற்றின் மூலம் வெளிப்படுவதை அறியலாம். களவுக்காலத்தில் தலைவிக்கு நல்லவன் போன்றும் கற்புக்காலத்தில் அவள் வளைநெகிழ்ந்து வருந்தும்படிச் செய்யும் கள்வனாகத் தலைவன் நிலைமாற்றம் பெற்றதை அடிமனதில் அதாவது நனவிலி மனதில் உள்ளதை உரைக்கின்றாள் தோழி.பொருளீட்டும் எண்ணம் கொண்ட தலைவன் தலைவியைப் பிரியக் கருதித் தன் செயலுக்கு வடிகாலாக அவளுக்கு அதிக அன்புகாட்டிச் சரிசெய்யக் கண்ட தோழி அவள்மீது காட்டும் அதிக அன்பினை விடுத்து இல்லத்திலேயே

அவளைப் பிரியாதிருப்பாயாக என அறிவுரை பகன்று இல்லறத்தை சிறக்க வைக்கின்றாள்.இக்காலக்கட்டத்தில் இல்லறம் சிறந்து விளங்கினால் தான் உளவியல் ரீதியாக எந்த பாதிப்பும் ஏற்படாது என்பதை எட்டுத்தொகை அகநூல்களில் ஐங்குறுநூற்றில் தோழியின் பாடல்களில் நேர்த்தியாக பதிவு செய்துள்ளன.

துணை நூற்பட்டியல்

[1] இரவிச்சந்திரன்.தி.கு. *சிக்மண்ட் ஃப்ராய்டு – உளப்பகுப்பாய்வு அறிவியல்.* அலைகள் வெளியிட்டகம், சென்னை - 600089.

[2] இளம்பூரணார். *தொல்.பொருளாதிகாரம்.* சாரதா பதிப்பகம், சென்னை.

[3] இ.எஸ்.டி. (தொ.ஆ). *இலக்கிய இசங்கள்.* பி.லிட். சிவகங்கை, 1996.

[4] சசிவல்லி, வி. சி. *தமிழர் திருமணம்.* உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 064.

[5] சமாதான சரோசாதேவி, செ. "சங்க இலக்கியத்தில் உளவியல் சிந்தனைகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* E - ISSN: 2581-7140, தொகுதி - 2, இதழ் - 1, மே - 2019.

[6] சுப்ரமண்யன், ந. *சங்ககால வாழ்வியல்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட்., சென்னை.

[7] சுப்ரமணியன் ச. வே. *சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும்.* மணிவாசகர் பதிப்பகம். சென்னை - 600108.

[8] சுபாஷ் சந்திர போஸ், ச. *தமிழ் இலக்கிய வரலாறு.* பாவை பப்ளிகேசன், சென்னை – 600 014.

[9] சோம சுந்தரனார், பொ. வே. *ஐங்குறுநூறு.* தென்னிந்திய சைவ சித்தாந்தப் நூற்பதிப்புக் கழகம், சென்னை – 600 008.

[10] தேவிரா. *தமிழ் இலக்கியத் தகவல் களஞ்சியம்.* நந்தினி பதிப்பகம், சென்னை, ப 36, 2014.

[11] நித்தியா, பா. & மணிக்கண்ணன். "உளப்பகுப்பாய்வு நோக்கில் ஜெயமோகனின் நாடகப்பிரதி பதுமை." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* E-ISSN:2581-7140, தொகுதி - 4, இதழ் - 1, டிசம்பர் - 2021 DOI: 10.5281/Zenodo.5819470

[12] நாமக்கல் கவிஞர், (உ.ஆ.) *திருக்குறள் தெளிவுரை,* தென்றல் நிலையம், சிதம்பரம், 2008.

[13] முனைவர் லீ. பெலிண்டா & புனிதா சுப்பிரமணியம். "ஐங்குறுநூறு மருதத்திணைப் பாடல்களில் தோழியின் உணர்வு." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* E-ISSN: 2581-7140. தொகுதி - 2, இதழ் - 3, பிப்ரவரி -2 020.

References

[1] Ravichandran.Thi.Ku.*Sigmund Freud Ulappakuppaivu Ariviyal.* Waves Publishers, Chennai-600089.

E-ISSN: 2581-7140
Volume - 5, Special Issue - 2, June 2023
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

[2] Ilayampuranar Urai. *Tholkappiyar Porulathikaram*. Saratha Publishing House, Chennai – 600 014.
[3] EST/TB. *Ilakia Isangal*. B.litt Sivagangai, 1996.
[4] Sasivalli, V. C. *Tamilar Thirumanam*. Ulaga Tamil Arachi Neeruvanam, Chennai.
[5] Samantha Sarosadevi, Se. "Psychological Thoughts in Sangam Literature." *International Journal of Tamil Language and Literature*, E-ISSN: 2581-7140, Volume -2, Issue - 1, May – 2019.
[6] Subramanian, N. *Sangakala Valviyal*, New Century Book House (P) Ltd. Chennai.
[7] Subramanian, S. V. *Sanga Elakkiyam Ettuthogai Mulamum Thelivuraiyum*. Manikavasagar Pathippagam, Chennai – 600 008.
[8] Subas Chandra Bose, S. *Tamil Ialkiya Varalaru*. Pavai Publication, Chennai – 600014.
[9] Somasundaranar, Po. Ve. *Ainkurunuru*. Thennienthiya Saiva Siddantha Nool Pathipagam, Chennai – 600 008.
[10] Thevira. *Tamil Thagaval Kazhanjiam*. Nandhini Pathippagam, Chennai, P 36, 2014.
[11] Nithya, B. and Dr V. Manikannan "Psychoanalytical Approach on Jeyamohan's Modern Drama *Pathumai*." *International Journal of Tamil Language and Literary Studies*, E-ISSN: 2581 - 7140, Volume - 4, Spl Issue – 1, December – 2021. DOI:10.5281/Zenodo 5819470.
[12] Namakkal Kavignar, (Eds) *Thirukkural Thelivurai*, Thenral Nilaiyam, Chidambaram, 2008.
[13] L. Pelida & M.Maheswari. "The Feelings of the Beloved's Maiden in the Songs of "Iynkurunooru's" Marutham Land." *International Journal of Tamil Language and Literary Studies*, E-ISSN - 2581-7140. Volume-2, Issue - 3, February – 2020.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement: இல்லை / NIL.

கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement: இல்லை / NIL.

கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன். / I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது. / The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

Volume - 6, Special Issue -1, Oc
ijtlls.com/volume-6-special-issue-1-october-2023.html

International Journal of
Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal

E- ISSN - 2581 - 7140

UGC CARE Listed Journal From July 2020

Home | Manuscript Guidelines | Policies | Archives | Special Issue | Editorial Board | Contact Us

தொகுதி - 6, சிறப்பிதழ் - 1, அக்டோபர் 2023

Volume - 6 Special Issue - 1, October 2023

Articles 01- 27

பதிப்புரை

தமிழ்மொழி மற்றும் இலக்கியத்திற்காக எமது **தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்** (Ijtlls) தம் இலக்கிய மற்றும் ஆராய்ச்சி அரும்பணியைச் செம்மையாகச் செய்து வருகின்றது. யு.ஜி.சி. கேர் (UGC CARE), எம்.எல்.ஏ (MLA) மற்றும் டி.ஓ.ஏ.ஜே (DOAJ) போன்ற ஆய்வுத் தளங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட எமது ஆய்விதழில் கௌரவ சிறப்பிதழ் ஆசிரியர்களாகப் பணியாற்றிட தன்னார்வம் கொண்ட பேராசிரியர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும், இச்சிறப்பிதழில் பெருமைமிகு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் ஆய்விதழ்களில் இருந்து பங்கு கொண்ட பேராசிரியர்கள் சிறந்த கட்டுரைகளை வழங்கியமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழர்கள் பெரும்பாலும் வாழ்க்கையின் ஒழுக்கம் மற்றும் நெறிமுறைகளில் கவனம் செலுத்தி வருபவர்கள். குடும்பம், சமூகம் மற்றும் கலாச்சாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்கள். தமிழர் வாழ்வு இயற்கையைத் தழுவியே அமைந்துள்ளது. அதற்கானச் சான்று தமிழ் இலக்கியத்தில் எண்ணில் அடங்காமல் உள்ளது. இன்றைய உலகு நமது முன்னோர்களால் நமக்கு தூய்மையாக அளிக்கப்பட்டது. அதை நமது சந்ததியினருக்குத் தூய்மையாக அளிப்பது நமது தலையாயக் கடமையாகும். புவியியல் சூழலில் அளவு கடந்த பிரச்சனை ஏற்பட்டுள்ளது. அதற்கு மனித வாழ்வின் எந்திரப் புரட்சியும் அதன் மூலமாக இயற்கையைச் சீர்குலைக்கும் முறைகளும் காரணங்களாக அமைகின்றன. இதனால் மனிதன் மட்டுமல்லாமல் ஏனைய நிலம் மற்றும் கடல்சார் உயிரினங்களும் துன்புற்று வருகின்றன. தற்பொழுது சீர்குலைந்து நிற்கும் புவி மற்றும் வானிலை

Quick Links

- Home
- Manuscript Guidelines
- Policies
- Archives
- Special Issue
- Editorial Board
- Contact Us

https://ijtlls.com
12:01 PM 09-12-2023

10. குறுந்தொகைத் திணைமரபில் இயற்கைப் பின்னணியும் ப்ராய்டின் உளவியல் கோட்பாடும்

ந. சுதா & முனைவர் ச. பிரியதர்சினி

Nature in the Thinai Culture of *Kurunthogai* and Freud's Theory of Psychology

N. Sudha & Dr. C. Priyadharshini

Abstract

Literature is a mirror of time that captures the lives of people. From the Sangam period to the present, the experiences of human beings became the subject of poetry and other types of literary genres. Sangam literature gives us a sense of the ancient Tamil civilization and culture of the Tamil people. Although they are very short songs, they stand high due to the theme and beautiful depiction of the subject, the historical messages and the emotions that explain it, and the textual excellence. Therefore, it is possible to examine the Sangam literature from the initial analytical approach with all the modern literary theories of today. Research is done comparing Sangam literature with various fields. At that level, the Sangam Literature describes Tamil literature as one that accommodates all kinds of western approaches. In that way, this article is based on the natural background and Freud's psychological theory in one of the associational literatures.The purpose of this article is to explore the natural resources in the poems of "Kurunthogai" using Freud's psychological ideas that enthral as paintings in our hearts and mix them with the lives lived at the Sangam time.

Keywords: Nature, Thinai Culture, *Kurunthogai*, Freud, Psychology.

Download PDF

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Volume - 6, Special Issue - 1, October 2023
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

குறுந்தொகைத் திணைமரபில் இயற்கைப் பின்னணியும் ப்ராய்டின் உளவியல் கோட்பாடும்

Nature in the Thinai Culture of *Kurunthogai* and Freud's Theory of Psychology

ந. சுதா, தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 20PHTMF004, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
N. Sudha, Research Scholar of Tamil, Reg. No.: 20PHTMF004, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0001-6639-2228
முனைவர் ச. பிரியதர்சினி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
Dr. C. Priyadharshini, Assistant Professor of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0009-1121-5502
DOI: 10.5281/zenodo.10122254

Abstract

Literature is a mirror of time that captures the lives of people. From the Sangam period to the present, the experiences of human beings became the subject of poetry and other types of literary genres. Sangam literature gives us a sense of the ancient Tamil civilization and culture of the Tamil people. Although they are very short songs, they stand high due to the theme and beautiful depiction of the subject, the historical messages and the emotions that explain it, and the textual excellence. Therefore, it is possible to examine the Sangam literature from the initial analytical approach with all the modern literary theories of today. Research is done comparing Sangam literature with various fields. At that level, the Sangam Literature describes Tamil literature as one that accommodates all kinds of western approaches. In that way, this article is based on the natural background and Freud's psychological theory in one of the associational literatures.The purpose of this article is to explore the natural resources in the poems of "Kurunthogai" using Freud's psychological ideas that enthral as paintings in our hearts and mix them with the lives lived at the Sangam time.

Keywords: Nature, Thinai Culture, *Kurunthogai*, Freud, Psychology.

ஆய்வுச்சுருக்கம்

இலக்கியம் என்பது மனிதர்களின் வாழ்வை படம்பிடித்து காட்டும் ஒரு காலக் கண்ணாடியாகும். சங்க காலத்தில் இருந்து இக்காலம் வரை ஒரு மனிதனுக்கு ஏற்படும் அனுபவங்கள் பாடுபொருள் ஆகின்றன. அக்கால மக்களின் நாகரிகத்தையும், பண்பாட்டையும் நமக்கு உணர்த்துபவை சங்க இலக்கியங்களாகும். குறுந்தொகைப் பாடல்கள் அடியில் குறுகியது என்றாலும் பொருள் நயத்தாலும், வரலாற்றுச் செய்திகளாலும் அதனை விளக்கும்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 6, Special Issue - 1, October 2023 Available at: www.ijtlls.com

உணர்வுகளாலும், உரை சிறப்பாலும் உயர்ந்து நிற்பதாகும். அது மட்டுமின்றி நம் உள்ளத்தில் ஓவியங்களாக விரிந்து அக்காலகட்டத்தில் வாழ்ந்த மாந்தர்களுடன் ஒன்று கலக்கச் செய்வதாகும் குறுந்தொகையில் இயற்கை வளங்களை கொண்டு பிராய்டின் உளவியல் சார்ந்த கருத்துகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

திறவுச் சொற்கள்: இயற்கை, திணை கலாச்சாரம், குறுந்தொகை, பிராய்ட், உளவியல்.

முன்னுரை

மனைமாட்சி இல்லாவிட்டால் எனை மாட்சியும் இல்லை என்று *திருக்குறள்* கூறுவது போல, சங்கக் கல்வி பெறா விட்டால் தமிழனுக்கு ஏனையக் கல்வியால் இனப்பெருமையில்லை என்று வ.சு.ப.மாணிக்கம் குறிப்பிடுவர். அந்த வகையில் தமிழர்களின் பண்பாடு, வாழ்வியல், சமயம், பொழுதுபோக்கு போன்ற அனைத்துக்கும் பெட்டகமாக இருப்பது சங்க இலக்கியங்கள் என்றால் மிகையல்ல. எனவே, தான் சங்க இலக்கியங்களை தொடக்க கால ஆய்வியல் அணுகுமுறையில் இருந்து இன்றுள்ள நவீன இலக்கியக் கோட்பாடுகள் அனைத்தும் கொண்டு ஆராய முடிகிறது. சங்க இலக்கியத்தினை பல்வேறான துறைகளோடும் ஒப்பிட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது. சங்க இலக்கியங்களுள் ஒன்றான குறுந்தொகைத் திணைமரபில் இயற்கை பின்னணியும் ப்ராய்டின் உளவியல் கோட்பாடும் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

குறுந்தொகை

குறைந்த அடியளவில் பாடப்பெற்ற பாடல்களின் தொகுப்பே குறுந்தொகை. இந்நூல் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இந்நூல் வாயிலாகப் பண்டையத் தமிழரின் இல்வாழ்க்கை, இயற்கை வளங்கள், ஒழுக்கம், மகளிரின் மாண்பு, அறவுணர்வு முதலியவற்றை அறியலாம்.

குறுந்தொகை	குறுமை + தொகை
ஆசிரியர் எண்ணிக்கை	205
பாடல் எண்ணிக்கை	401 கடவுள் வாழ்த்து
எல்லை	4 முதல் 8 வரை
பொருள்	அகம்
தொகுத்தவர்	பூரிக்கோ
தொகுப்பித்தவர்	பெயர் தெரியவில்லை
கடவுள் வாழ்த்து பாடியவர்	பாரதம் பாடிய பெருந்தேவனார்
தெய்வம்	முருகன்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 6, Special Issue - 1, October 2023 Available at: www.ijtlls.com

அகப்பொருள் பெண் பாத்திரங்களாகிய தலைவி, தோழி போன்றோர் தாம் கருதும் எண்ணங்களை வெளிப்படையாக உரைக்காமல் குறிப்பாகப் புலப்படுத்துமாறு கவிஞர் படைத்துக் காட்டும் இலக்கிய உத்திகளுள் ஒன்று தான் உள்ளுறை உவமம் உள்ளுறைக்கு இலக்கணம் வகுக்கும் தொல்காப்பியர், உள்ளுறையானது தெய்வம் ஒழிந்ததை நலன் எனக் கொள்ளும் என்றும்

உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள் முடிகென

உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம் (தொல்.அகம்., நூ. 58)

என்றும் வரையறுக்கின்றார். வெளிப்படையாகக் கூறப்பட்ட உவமத்தினைக் கொண்டு வெளிப்படையாகக் கூறப்படாத உவமிக்கும் பொருள் தோன்றும் படியாகக் கவிஞன் கருதிய பொருளை உட்பொதித்துப் பாடக்கூடிய இவ் இலக்கிய உத்தியே உள்ளுறை என்றும் குறுந்தொகையில் இடம்பெறும் உள்ளுறை இறைச்சி இவைகளைப் பொதுப்பட "குறிப்புப் பொருள்" என்றே உ.வே.சா குறிப்பிடுகின்றார்.

திணைப் பாகுபாடு

திணை	குறிஞ்சி	நெய்தல்	பாலை	முல்லை	மருதம்	மொத்தம்
பாடல்கள்	147	71	90	45	48	401

திணை	களவு	கற்பு	மொத்தம்
குறிஞ்சி	145	2	147
நெய்தல்	70	1	71
பாலை	8	81	90
முல்லை	2	43	45
மருதம்	10	38	48
மொத்தம்	235	171	401

கூற்றுப் பாகுபாடு

திணை	தலைவன்	தலைவி	தோழி	செவிலி	பரத்தை	பாங்கன்	கண்டோர்
குறிஞ்சி	35	49	61	0	0	2	0
நெய்தல்	3	46	22	0	0	0	0
பாலை	16	15	29	7	0	0	3
முல்லை	6	29	7	2	1	0	0
மருதம்	1	21	22	0	4	0	0
மொத்தம்	61	180	141	9	5	2	3

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 6, Special Issue - 1, October 2023 Available at: www.ijtlls.com

குறுந்தொகை – வரலாற்றுப் பதிவுகள்

முதன் முதலில் திருக்கண்ணபுரத்துச் சேர்ந்த திருமாளிகைச் சௌரிப் பெருமாள் ரங்கன் தான் இயற்றிய புத்துரையுடன் 1915 ஆம் ஆண்டு பதிப்பித்து வெளியிட்டார். இதன் பின்னர் இந்நூலின் முதல் 380 பாடல்களுக்குப் பேராசிரியர் உரை எழுதியுள்ளார் “பேராசிரியர்” உரை எழுதாத அடுத்த 20 பாடல்களுக்கு “நச்சினார்கினியார்” உரை எழுதிச் சேர்த்துள்ளார். நச்சினார்கினியார் தாம் எழுதிய தொல்காப்பிய உரையில் (அகத்திணையியல், நூ. 46) பேராசிரியரின் *குறுந்தொகை* உரையை மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார். இந்த இரண்டு உரைகளும் இன்று கிடைக்கவில்லை. குறுந்தொகைப் பாடல்களில் சோழன் கரிகால் வளவன், குட்டுவன, திண் தேர்ப் பொறையன், பசும்பூண் பாண்டியன் போன்ற பேரரசர்கள் மற்றும் பாரி, ஓரி, நள்ளி, நன்னன் போன்ற சிற்றரசர்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. குறுந்தொகையில் ‘கொங்குதேர் வாழ்க்கை’ என்னும் பாடலை இறையனார் பாடி தருமி என்ற புலவருக்கு ‘பொற்கிழி’ வழங்கச் செய்தது சிறந்த வரலாற்றுச் சான்றாக அமைகிறது.

மகிழ்நன் மார்பே வெய்யை யால்நீ
அழியல் வாழி தோழி (குறு., பா.73)

எனும் பாடல் சிற்றரசர்களின் வரலாற்று செய்திகளை எடுத்துரைக்கிறது.

இயற்கையோடு இயைந்த வாழ்வியல்

இயற்கை என்பது இயல்பாகத் தோன்றி மறையும் பொருட்கள் அவற்றின் இயக்கம். அவை இயங்குமிடம் இயங்கும் காலம் ஆகியவை அனைத்தும் இணைந்ததுவே இயற்கை என்கிறோம். இயற்கை தனை சுபாவம், வழக்கம், கொள்கை, இயல்பு, குணம் என்று பொருள் கொள்ளப்படுவதை அறியலாம். (சௌரா தமிழ் அகராதி) இயற்கைக்கு நிலைமை கொள்கை என்னும் பொருள் கொள்ளப்படுகிறது என்பதை தமிழ் இலக்கிய அகராதி கூறுகிறது.

இயற்கையை திணை ஒழுக்கத்தோடு ஒன்றாக இணைவித்தே சங்க புலவர்கள் காண்கிறார்கள். அவர்கள் பாட்டினுள் ஒர் ஒற்றுமை இருப்பது போல இயற்கையும் மனிதனுமாகப் பிணைந்து ஒற்றுமையை அவர்கள் உலகில் காண்கின்றார்கள்.

செங்களம் படக்கொன்டவுணர்த் தேய்த்து
செங்கோலம்பின் செங்கோட்டு யானைக்
கழல்கொடி சேஎய குன்றம்
குருதி பூவின குறைக்காந் தட்டை. (குறுந்., பா. 1)

தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் மரபியலில் நிலம், தீ, நீர், வளி வீசும்போது ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் (தொல்.மரபியல்., நூ. 19) இயற்கை என்பது இயல்பாகவே உருவானவை இயற்கை வளங்களைப் பொறுத்தே நமது வாழ்வாதாரம் அமைகின்றது. இயற்கையின் கொடையான இயற்கை வளங்களைப் பாதுகாப்பதே நமது கடமையாகும். உலகமானது

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 6, Special Issue - 1, October 2023 Available at: www.ijtlls.com

இயற்கையான நிலம், நீர், தீ, காற்று, வானம் என ஐம்பூதங்களாகும். இத்தகைய இயற்கையானது அளிக்கும் நன்மைகள் எண்ணிலடங்காதவையாக உள்ளன. காடுகள் மழை தருவதுடன் மண் அரிப்பினைத் தடுக்கிறது. பூமியின் தட்பவெப்பநிலையையும் பாதுகாத்து மழை தரும் கடவுளாக இயற்கை வளங்களை பாதுகாத்தனர். ஒரு நாட்டின் பொருளாதாரமே அதன் நீர் வளத்தை சார்ந்துள்ளது. உலக உயிரினங்கள் உயிர் வாழ நீர் மிகவும் அவசியமானதாகும். இவ்வாறு இருக்கக்கூடிய இயற்கை வளங்களைப் பாதுகாத்து கடமை என்பது போல சங்க காலத்தில் இலக்கியங்கள் இயற்கையை வைத்து தான் நாகரிகம், பண்பாடு, கலாச்சாரத்தை பிரித்துள்ளனர். அவ்வாறு குறுந்தொகைப் பாடல்களில் இயற்கை வளங்களும் அதிகமாக காணப்படுகின்றன. அகப்பாடல்கள் அனைத்தும் சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாதவையாகும். அதாவது தலைவன், தலைவி, தோழி என்று இருக்குமே தவிர தலைவன் பெயரோ, தலைவி பெயரோ, தோழி பெயரோ எந்த அக பாடலிலும் இருக்காது. அக பாடல்கள் அன்பின் முதிர்ச்சியாகிய காதல் பாடல்களாகும். அவை உலக காதலர் அனைவருக்கும் உரிய ஒன்றாகும். ஒரு தனிப்பட்ட இனத்திற்கோ, மொழியினருக்கோ உரியவை அல்ல உலகில் உள்ள அனைவருக்கும் கூறப்பட்டவை. சங்க அகப்பாடல்கள் அப்படி இருக்கக்கூடிய சங்க இலக்கியங்கள் எட்டுத்தொகையில் உள்ள குறுந்தொகையில் உள்ள இயற்கை வளங்களை கொண்டே தலைவன், தலைவியின் காதல் வாழ்வை (அன்பு வாழ்வை) நிர்ணயிக்கின்றன.

குறுந்தொகைத் தலைவனின் பண்பு

தலைவி தலைவனோடு கொண்ட காதல் இந்நிலவுலகத்தை காட்டிலும் மிகப்பெரியது. வானை காட்டிலும் உயர்ந்தது, கடல் ஆழத்தைக் காட்டிலும் ஆழமானது என்று பேசுகிறாள் தோழியானவள். தலைவனை கடிந்தாலும் தலைவி தலைவனை இயற்கையோடு ஒத்து நிற்பவன் என்று உயர்வாகவே கூறுகிறான்.

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்ததன்று
நீரினும் ஆர்அளவு இன்றே- சாரல்
கருங்கோல் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே (குறு., பா. 3)

தலைவனுடைய காதல் (நட்பு) நிலம், வான், கடல், நீர், மலை ஆகியவற்றை விட தூய்மையானது. எனவே, நீ குறை கூறாதே என்று கூறி மலையில் உள்ள தேன் ஆனது குறிஞ்சிப் பூவில் தேனை எடுத்துக் கொண்டு போய் என்ன செய்யும் கூடு தானே கட்டும் அதுப்போல தலைவன் அவன் இல்லத்துக்கு அழைத்துச் செல்வான் என்கின்றாள். இயற்கையின் ஆழ அகலத்தோடு ஒப்பிட்டு ஒத்து நிற்பவன் தலைவன் என்கின்றாள்.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Volume - 6, Special Issue - 1, October 2023
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

பிராய்டின் மன உளவியல்

உளவியல் அல்லது மனோதத்துவம் என்பது மனதின் செயல்பாடுகள் மற்றும் நடத்தைகளை அறிவியல் முறையில் ஆய்வு செய்யும் கற்கை மற்றும் பயன்பாட்டு ஒழுங்கு முறையாகும். உளவியல் ஆய்வு என்பது அடிப்படை அல்லது செயல்முறை சார்ந்ததாகக் கருதப்படும். இவ்வாய்வானது உள்ளுணர்வு, அறியும் ஆற்றல், கவனம், மன உணர்வு அல்லது உணர்ச்சி வேகம், இயல்பூக்கமம், ஆளுமை, நடத்தை செயல்பாடுகள், உள்ளார்ந்த தொடர்புகள் ஆகியவை தொடர்பான ஆய்வைக் குறிக்கும். குறிப்பாக பிராய்டு ஆழ்ந்த உளவியல் என்பது மயக்க நிலை மனது என்று கூறுகிறார். 1890-ல் இருந்து 1939 வரை சிக்மண்ட் பிராய்டு ஒரு மனநோய் தீர்க்கும் முறையை மனப்பகுப்பாய்வு எனும் பெயரில் கண்டார். மன இறுக்கம் மற்றும் மனோநோய் குணம் தீரக்கூடியதாக உள்ளது என்று கண்டவர் ப்ராய்டு. ப்ராய்டு மனத்தின் செயல்பாடுகளை அதாவது ஆளுமை நிலையினைப்,

1. **பண்படா உள்ளம்** (ID)
2. **தன்முனைப்பு** (EGO)
3. **பண்பட்ட உள்ளம்** (SUPER EGO)

என்று மூன்று நிலைகளாக பிரிக்கிறார். மனித மனப்போக்கில் பெரும்பான்மையானவை ஆழ்மன நிலையிலேயே உள்ளன என்பதும் மனித நடத்தைகள் அனைத்தும் பாலுணர்விலேயே உந்தப்படுகின்றன என்பதும் பிராய்டின் கோட்பாடுகளில் முக்கியமானதாகும்.

மனம்

ஒருவரின் மனம் நொடிக்கு நொடி மாறும் என்பது உண்மையான ஒன்றாகும். ஒருவரின் மனம் மற்றும் மனத்தின் செயல்பாடு ஏதோ ஒன்றை உணரக்கூடியவை என்று கூறுகிறார் அலெக்சாண்டர் பெர்சின்.

மனம் - அலெக்சாண்டர் பெர்சின்

ஆழ்நிலைமனம்	விழிப்புணர்வு மனம்	தொடக்கநிலை மனம்
வெளியே சொல்லாத ஆசைகள், உணர்வு நிலைகள்	செயல்பாடுகள் உணர்ச்சிகள் நமக்கு தெரிந்த நம்மைப் பற்றிய பிம்பங்கள்	மனிதர்களின் சிறுவயது நினைவுகள் சேகரித்து வைக்கப்படும்

மனமும் உடலும்

மனத்தைத் தனியாகவோ, உடலைத் தனியாகவோ பிரிக்க முடியாது. மனம் உடலையும், உடல் மனதையும் சார்ந்த இயங்குவன. அவை சேர்ந்தே வளர்கின்றன. மனம் என்ற சொல்லுக்கு அதேபோல் உள்ளம், நெஞ்சம், அகம் எனப் பல சொற்கள் உள்ளன. மன் என்ற அடிச்சொல்லிருந்து இது தோன்றியது எனக் கொள்ளலாம். மன் என்பது "நிலைபேறு" எனக் குறிப்புப் பொருளைக் கொண்டது. எனத் தமிழ்ப் பேரகராதி கூறுகின்றது. மனமானது

E-ISSN: 2581-7140
Volume - 6, Special Issue - 1, October 2023
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

புலனுணர்ச்சி உணர்வு எண்ணங்கள் போன்ற அனுபவங்களை பெரும் கருவியாக விளக்குகிறது. ஒரு சாதாரண மனிதன் எதைப் புரிந்து கொள்கிறானோ அதுவே தற்கால உளவியல் நூல்களாக குறிக்கப்படும். மனம் என்பதை ஆறாவது அறிவு எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். **ஆறறிவதுவே அவற்றோடு மனனே (தொல்.மரபு., நூ. 571)** என்று விளக்கியுள்ளார். உடல் வளர்ச்சியோடு ஒத்த நிலையில் மனவளர்ச்சி அமைவதை உளவியல் அறிஞர்கள் வலியுறுத்துவர். அறிவும் உணர்வும் ஒரு சேர கொள்வதால் அவ்வளர்ச்சி சீரான மனவளர்ச்சி எனப்படும். குழந்தைப் பருவத்திலிருந்து குமரப்பருவத்திற்கு ஏற்படும் மாற்றம் பதினொன்றிலிருந்து பன்னிரெண்டாவது வயதிற்குள் நிகழும் மாற்றம் என்றும் இப்பருவம் பதினெட்டு வயது வரை நீடிக்கும்" உளவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். இத்தகைய கருத்திற்கு இணங்க ஒவ்வொரு பருவத்திலும் மனம் தன்னியல்பாலும், உடலியல்பாலும,; சூழலாலும் தாக்கம் பெறுகின்றது. இத்தாக்கம் உடல் வளர்ச்சிக்கும் ஒரு வகையில் காரணமாகின்றது. சங்க அகஇலக்கியங்களிலும், இப்பருவ வளர்ச்சி குறிக்கப்படுகின்றன. இதனைக் குறுந்தொகையில்,

முலையே முகிழ்முகிழ்த்தனவே தலையே
கிளைஇய குரலே கிழக்கு விழந்தனவே
செறிநிறை வெண்பலும் பறிமுறை நிரம்பின
சுணங்கும் சிலதோன் றினவே அணுகுவதற்கு
யான்;றன் அறிவலே தானறி யலளே
யாங்கா குவள்கொல் தானே
பெருமுது செல்வர் ஒருமட மகளே (குறு., பா. 337)

என்ற பாடலில் காணமுடிகிறது. குமரப் பருவத்தில் ஏற்படும் அகப்புறத் தாக்கங்களை உள்ளத்தின் இயல்பான நிலையிலிருந்து புதிய உணர்வுகளை நாடுதல் இயல்பூக்கங்களின் நிறைவேற்றத்தை அறியும் வேட்கை பாலுணர்வு உந்துதலால் எதிர்பாலரை நாடும் உணர்வு ஆகிய புதுமைகளை மனம் காண விழைகின்றது. இவ்விழைவு உள்ளத்திற்குள் நுட்பமாகவோ வெளிப்படையாகவோ போராட்டங்களை உருவாக்குகின்றது.

தலைவனின் மன ஆறுதல்

ஒரு ஆடவனும், பெண்ணும் தற்செயலாக சந்தித்தார்கள் முதல் சந்திப்பிற்குப் பிறகு அவர்கள் பலமுறை மீண்டும் சந்தித்து கருத்து ஒருமித்து பழகினார்கள். தலைவிக்கான சந்தேகம் தன் காதல் தொடருமா அல்லது தன் தலைவன் தன்னை விட்டு சென்று விடுவானா எனக் காதலி கவலைப்படுகிறாள். எவ்வித உணர்வும் இல்லாத நாம் நெருங்கிப் பழகுகிறோம் நம்முடைய நெஞ்சங்கள் கலந்துவிட்டன. நான் பிரிய மாட்டோம் என உறுதிக் கூறி தலைவன் ஆறுதல் கூறுகிறான்.

E-ISSN: 2581-7140
Volume - 6, Special Issue - 1, October 2023
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

யாயும் ஞாயும் யார்ஆ கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்?;
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந்தனவே (குறு., பா.40)

என்னுடைய தாயும், உன்னுடைய தாயும் என்னுடைய தந்தையும் உன்னுடைய தந்தையும் எந்த முறையில் உறவினர். நானும் நீயும் முன் பின் தெரியாதவர். ஆனால் செம்மண் நிலத்தில் பெய்யும் மழைநீர் அம்மனோடு கலந்து அதன் தன்மையை அடைவதைப் போல் அன்புடைய நெஞ்சங்கள் தாமாகவே ஒன்றுபட்டன. நாம் ஒருவரையொருவர் விட்டுப் பிரிய மாட்டோம் என்று தலைவன் இயற்கையின் செழுமையைக் கொண்டு மண், நிலம், நீர் ஆகிய செழுமையை முன்னிறுத்தி தன்னுடைய அன்பை வெளிப்படுத்துகிறான். தன்னுடைய மன வெளிப்படை தங்களுடைய ஆழ்மனம் தான் உங்கள் உணர்ச்சிகளின் இருப்பிடம் இதுதான். படைக்கின்ற மனம் நீங்கள் நல்லவற்றைச் சிந்தித்தால் நல்லவை மலரும், தீயவற்றை சிந்தித்தால் தீயவை பிறக்கும் இப்படிதான் மனம் வேலை செய்கிறது என்கிறார் டாக்டர் ஜோசப் மர்பி. (ஆழ்மனத்தின் அற்புத சக்தி, ப. 19)

தலைவன் இயற்கையின்பின்னணி மையமாகக் கொண்டு தலைவியை திருமணம் என்று கூறும் இந்த சிந்தனையானது உளவியல் ரீதியில் ஆழ்மனதில் தோன்றும் ஒரு உணர்வே ஆகும். மனித உள்ளத்தின் உணர்வே எல்லா அறிவியல்களுக்கும் கலைகளுக்கும் கருவறையாக விளங்குவது. எனவே அத்தகைய உள்ளத்தின் வழிமுறைகளை ஆராய்கிற உளவியல் இலக்கியம் பற்றிய ஆராய்ச்சிக்கும் ஏற்புடையதாக இருக்க முடியும் என்கிறார். (பா. நித்தியா, ப. 81)

இயற்கையின் வெளிப்பாடு

தலைவன் இரவில் வந்து தலைவியைச் சந்திக்க வரும் சூழலில் இடிமுழங்கி மழை பொழிகின்றது. இத்தகைய நிலையை தலைவனுக்கு எடுத்துரைக்கும் வகையில் மழையை இரக்கமில்லையா? என்று தலைவி கேட்பது போன்று ஔவையார் படைத்துள்ளார்.

நெடுவரை மருங்கின் பாம்புபட இடிக்கும்
கருவிசை உருமின் கழறுகுரல் அளைஇக்
காலொடு வந்த கமஞ்சூல் மாமழை! (குறு., பா. 158)

எனும் பாடல் அடியில் உயர்ந்த மலைப்பக்கத்தில் இடி ஓசை கேட்டுப் பாம்புகள் இறக்கின்றன. மிகுந்த வேகத்துடன் இடி இடித்து முழங்கிப் பேரோசையுடன் கலந்து பெருங்காற்றுடன் வந்த சூல் கொண்ட நீர் நிறைந்த மேகங்கள் பெருமழையைப் பொழிந்தன. மழை இமயத்தையே அசைக்கும் பண்புடையது. மழையே தனித்திருக்கும் இரங்கத்தக்க பெண்டிர் மீது உனக்கு

E-ISSN: 2581-7140
Volume - 6, Special Issue - 1, October 2023
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

இரக்கமில்லையா? என்று தலைவி கேட்பது பாம்புகள் இறந்து விடுகின்றன. தனிமையில் இருக்கும் பெண்கள் எத்தகைய துன்பத்தை அனுபவிக்க வேண்டியுள்ளது என்று மழைக்குக் கூறுவதாக தலைவனுக்கு எடுத்துரைக்கின்றாள். ஒரு செய்தியைத் தலைவனிடம் நேரடியாக கூறாமல் மறைபொருளாகக் கூறும் வழக்கம் இருந்துள்ளதையும் மழையையும் பிறவற்றையும் மறைபொருளாகப் பயன்படுத்தியுள்ளதையும் அறியலம். இதற்குச் சான்றாகத் தொல்காப்பியர் கூறும் பொழுது தலைவி தலைவனுக்கு எதிராகப் பேசக்கூடியவள் அல்ல என்பதை,

சொல் எதிர் மொழிதல் அருமைத்து ஆகலின்
அல்லகூற்றுமொழி அவள் வாயிளான (தொல்.பொருள்., நூ. 1056)

தலைவி தலைவனுக்கு எதிராகப் பெரும்பாலும் எதிர் உரை கூறமாட்டாள் என்பதால் அல்ல கூற்றாகக் குறிப்பால் உணர்த்துவதே அவளிடம் உண்டு என்கிறார். இதன் அடிப்படையிலேயே குறுந்தொகையிலும் தலைவனிடம் தலைவி தன் நிலையை நேர்நிலையில் கூறாமல் இயற்கையின் வெளிப்படையாக இருக்கும் மழையிடம் கூறி குறிப்பால் வெளிப்படுத்துகின்றாள் என்பது தெளிவாகின்றது. (முனைவர் சரளாதேவி, ப. 71)

குறிஞ்சி

மலைச்சாரலில் குறிஞ்சிப் பூக்கள் மலர்கின்றன. குறிஞ்சி மரத்தின் கொம்புகள் கரிய நிறம் கொண்டவை. கொம்புகளில் உள்ள மலர்களில் மிகுதியான தேன் நிறைந்திருக்கும் மிக்க சுவையுடைய அத்தேனை வண்டுகள் சேகரிக்கின்றன. குறிஞ்சி நில இயற்கைக்கு சிறந்த உதாரணமாகப் பல பாடல்கள் விளங்குகின்றன. பலாவின் சினைதொறும் தொங்கும் பழங்கள் மிக்க சுவை வாய்ந்தவை. இச்சுவைக்கு ஒருவன் தன் சொந்த முயற்சியால் ஈட்டிய பொருளைக் கொண்டு பெற்ற உணவைத் தன் சொந்த வீட்டிலேயே இருந்து உண்ணும் போது அடையும் இன்பத்திற்கு ஈடாகக் கூறுகிறார் வெண்பூதன் என்ற புலவர்,

தம்மிற்றமதுண் டன்ன சினைதொறும்
தீம்பழந் தூங்கும் பலவின் (குறு., பா.257)

குறிஞ்சி நிலத்தின் மலரும் மரமும் இவ்வாறாக அமைந்து அந்நிலத்திற்கு பெருமை சேர்ப்பதை காணமுடிகிறது.

முல்லை

கார்காலத்தில் கொன்றை மரங்களின் மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. கொன்றை மரம் ஒன்றில் ஏராளமான மலர் கொத்துக்கள் நிறைந்துள்ளன. பசிய தழைகளுக்கிடையே மஞ்சள் நிறமான பூக்கள் பூத்துக் கிடப்பதை ஓதலாந்தையர் என்ற புலவர். கொன்றையின் அடர்ந்த தழைகள் அவருக்கு மகளிரது கூந்தலை நினைவூட்டுகின்றது. இடையிடையே தோன்றும் மஞ்சள் நிறப் பூக்கள் அம்மகளிர் கூந்தலிலே சூடிய பொன்னாலாகிய

E-ISSN: 2581-7140
Volume - 6, Special Issue - 1, October 2023
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

அணிகலன்களை நினைவூட்டுகின்றன. எனவே கொன்றையின் மலர்கள் பூத்துக் கிடப்பது மகளிர் தலையில் பொன் அணிகலன்களைப் பூண்டது போன்றிருக்கிறது என்பதனை,

வண்டுபடத் ததைந்த கொடியிணை ரிடையிடுபு
பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்
கதுப்பிற் றோன்றும் புதுப்பூங் கொன்றைக்
கானம்... (குறு., பா. 21)
செல்வச் சிறாஅர் சீறடி பொலிந்த
தவளை வாயப் பொலஞ்செய் கிண்கிணிக்
காசின்ன போதீன் கொன்றை (குறு., பா. 148)

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றது. கொன்றையின் பூப்பொன் நிறமானது. ஆகவே உவமையாகப் பொன்னால் செய்யப்பட்ட கிண்கிணிக் காசைத்தான் கூற முடியும். புலவர் பொன்னாலான கிண்கிணிக் காசு என்று சொல்லாமல் நயம்படச் செல்வக் குழந்தைகளின் காலிலுள்ள கிண்கிணி என்கிறார். அதன் மூலம் செல்வச் சிறார் காலிற் பொலியும் கிண்கிணி பொன்னாலாயதாய் இருக்கும் என்பதைச் சொல்லாமல் சொல்லுகிறார். முல்லை நிலத்தில் மலரும் மலர்களால் பொன்னிறமாக அனைவரின் மனதைக் கவரும் வகையில் பூத்துக் குலுங்குகின்ற காட்சியினை அறியமுடிகிறது.

மருதம்

வயல்வெளியில் நீர் நிறைந்திருக்கிறது. இங்குள்ள பொய்கையில் வாளை மீன்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. பொய்கையை அடுத்தார் போன்று மாமரங்கள் இருக்கின்றன. மாமரங்களிலிருந்து முதிர்ந்த பழங்கள் பொய்கைக்குள் விழுகின்றன. அங்கு வாழும் வாளை மீன்கள் அப்பழங்களை வந்து கவ்வுகின்றன. இத்தகைய செழிப்பு மிக்க வளங்களைக் கொண்டுள்ளது மருதநிலம்

கழனி மாத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூ மூரன் (குறு., பா. 18)

மருத நில நீர்த்துறைகளில் வளரும் பூக்களில் பகன்றையும் ஒன்று. இது மாலைக் காலத்தில் மலரும் தன்மையை கொண்டது. இதழ்கள் முறுக்கமைந்த தோற்றம் கொண்டவை. இப்பூவானது புதிய வெள்ளை ஆடையைக் கஞ்சியில் தோய்த்தெடுத்து அதை முதல் தப்பு தப்பியவுடன் தண்ணீரில் விட்டால் எவ்வாறு சுருக்கங்களோடு முறுக்கி நிற்கமோ அது போன்றிருக்கிறது என்கிறார் புலவர். கழார்க்கீரனெற்றியன். மேலும், இம்மலர் கள்ளின் நாற்றத்தைப் போன்று நறுமணமற்றதாக இருக்கும் என்பதை,

பேரிலைப் பகன்றைப் பொதியவிழ் வான்பூ
இன்கடுங் கள்ளின் மணமில கமழும் (குறு., பா. 330)

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Volume - 6, Special Issue - 1, October 2023
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

இப்பாடல் வரிகள் சுட்டுகிறது. வண்ணாத்தி கஞ்சியிலே தோய்த்து ஆடை துவைத்தலாகிய ஒர் எளிய நிகழ்ச்சியை தம் புலமைப் பெருக்கால் என்றும் அழியாத ஒர் ஓவியமாகக் காவியத்திலே தீட்டு விட்டார் இப்புலவர்.

நெய்தல்

கடலின் நீர் நீலமணியைப் போன்று கருநிறமுடையதாக இருக்கிறது. கடலையடுத்துள்ள உப்பங்கழிகளில் நெய்தற் கொடிகள் படர்ந்துள்ளன. நெய்தலின் அகன்ற பசிய இலைகள் நீர்ப்பரப்பை மூடியுள்ளன. நெய்தற் பூக்கள் அப் பசிய இலைகளுக்கு மேலே தோன்றும் மலர்த் தொகுதி பார்வைக்குக் குளத்தில் மூழ்கி விளையாடும் மகளிரின் கண்களைப் போல தோன்றுகின்றன.

பாசடை நிவந்த கணைக்கா னெய்தல்
இனமீருங்கழி யோத மல்குதொறும்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும் (குறு., பா. 9)

குளத்தில் மூழ்கியிருக்கும் மகளிர் தண்ணீருக்கு மேலே தலையை தூக்கும்போது வெளிப்படுகின்ற அவர் தம் கண்களை நெய்தற் பூவுக்கு ஒப்பாக காட்சி அளிப்பதை சுட்டுகின்றது. கடற்கரையில் படரும் கொடைகளுள் அடும்பும் ஒன்றாகும். அதன் இலை இரு பிரிவாக மானின் அடியைப் போன்று இருக்கிறது. மலரோ குதிரையின் கழுத்திலிடும் சதங்கை மணியைப் போன்றிருக்கிறது. அவ்வொள்ளிய மலரை வளையலணிந்த மகளிர் பறித்து விளையாடுவதுண்டு.

பாலை

வாகை மரம் பாலை நிலத்திற்குரிய மரங்களில் ஒன்று. வாகை மரத்தின் காய்கள் முற்றிக் காய்ந்திருக்கின்றன. அவற்றின் மீது காற்றுப்படும்போது ஒருவகை ஒலி உண்டாகிறது. இச் சலசலப்பு ஒலியைப் பெரும்பதுமனார் என்ற புலவர் பறையொலிக்கு ஒப்பிடுகிறார். ஆரியக் கூத்தர்கள் அக்காலத்தில் கயிறாடுதல் வழக்கம். இரண்டும் மூங்கில் இணைக்கப்பட்டிருக்கும் ஆரியக் கூத்தர்கள் மூங்கில் கழியில் ஏறி அக்கயிற்றின் மீது நின்றாடுவார்கள். ஒரு கூத்தன் மேலே கயிற்றின் மீது ஆடிக்கொண்டிருக்கும் போது கீழே நிற்கும் மற்றொருவன் பறை ஒன்றினைத் தட்டி வேடிக்கை பார்க்கக் கூட்டம் சேர்த்துக் கொண்டிருப்பான். வாகையில் காற்று வீசும்போது அதன் முதிர்ந்த காய்கள் எழுப்பும் ஒலியானது ஆரியக் கூத்தர் கழையிற் கட்டிய கயிற்றின் மீது ஏறி ஆடும் பொழுது கொட்டப்படும் பறவையின் ஒலியைப் போன்றிருக்கிறது என்கிறார் புலவர்.

தொகுப்புரை

E-ISSN: 2581-7140
Volume - 6, Special Issue - 1, October 2023
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

கேப்புத்திறனை உளவியல் ரீதியாக காயப்படுத்துவது குறுந்தொகையில் இன்றியமையாததாக அமைகின்றது. இன்பமும் துன்பமும் மாறிமாறி தோன்றுவதால் மன ரீதியான போராட்டங்கள் நிகழ்கின்றன. சங்க காலத்தில் இயற்கை வளங்கள் மீது ஏற்றி பாடப்பட்டிருக்கும் பாடல்களுள் இதற்கு சான்றாக அமைகின்றன. மனப்போராட்டங்கள் தலைவி, தலைவன், தோழிக்கே அதிகமாகத் தோன்றுகின்றன. கலக்கம், ஏமாற்றம், ஆற்றாமை ஆகிய மனநிலைகள் உணர்வு போராட்ட ரீதியாக அமைகின்றது. இவ்வாறான உணர்வு போராட்டத்தை இயற்கை மீது அமைத்து பாடப்பட்டு உளவியல் சிந்தனையாக அமைகின்றது. மனம் சார்ந்த பிரச்சினைகளை குறுந்தொகைப் பாடல்களில் இயற்கை வளங்களோடு மற்றும் உளவியல் ரீதியான மாற்றங்களையும் எவ்வாறு சங்ககாலத்தில் வாழ்ந்தனர் என்பது அறிய முடிகின்றது.

துணைநூற்பட்டியல்

[1] சுப்பிரமணியன், ச.வே. *சங்க இலக்கியமும் எட்டுத்தொகையும் மூலமும் தெளிவுரையும்.* மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை - 600108.

[2] சாரதாம்பாள், செ. *இலக்கியமும் உளப்பகுப்பாய்வும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், சென்னை - 600098.

[3] காஞ்சனா, இரா. *இலக்கியமும் உளவியலும்.* விஷ்ணுப்பிரியா பதிப்பகம், மதுரை, 1997.

[4] பாலசுப்பிரமணியம் சிற்பி. *புதிய தமிழ் இலக்கிய வரலாறு: பண்டைய தமிழ் இலக்கியம் தொகுதி-1*, சாகித்திய அகாதெமி, 2013.

[5] *குறுந்தொகை.* www.tamilvu.org/library/l1220/html/l1220ind.htm 10 ஆகஸ்ட் 2023 அன்று அணுகப்பட்டது.

[6] அலெக்சாண்டர் பெர்சின் மேட் லிண்டன். *மனம்.* studybuddhism.com/ta/munaivar-alekcantar-percin 10 ஆகஸ்ட் 2023 அன்று அணுகப்பட்டது.

[7] கு.வெ பாலசுப்பிரமணியன். அ.மா பரிமணம்., (ப.ஆ.) *குறுந்தொகை மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி). லிட்., சென்னை, முதற்பதிப்பு - 2004.

[8] போவாஸ் ஜி.டி. *எலிமெண்ட்ஸ் ஆப் சய்காலஜி.* p.170.

[9] அன்பரசு சண்முகம். கா. சி. வின்சென்ட். *உடல் மடம் உள்ளே.* சென்னை.

[10] இளம்பூரணார், (உரை). *தொல்காப்பியம் - பொருளதிகாரம்* அகத்திணை. மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை - 600108.

[11] நித்தியா, பா. & மணிக்கண்ணன். "உளப்பகுப்பாய்வு நோக்கில் ஜெயமோகினின் நாடகப்பிரதி பதுமை." *தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ்.* E-ISSN: 2581-7140, தொகுதி 4, இதழ் 1, டிசம்பர் 2021.

E-ISSN: 2581-7140
Volume - 6, Special Issue - 1, October 2023
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

[12] சரளாதேவி, ம. "குறுந்தொகையில் இயற்கையின் கேட்புத்திறன்." *புதிய அவையம்*, தொகுதி 2, ISSN: 2456-821X, தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

References

[1] Subramanian, Sa. Ve. Su. *Sanga Ilaiyamum Ettuthogai Moolamum Thelivurayum.* Manikkavasakar Publishing House - Chennai 600 108.
[2] Sarathambal. Se. *Ilakiyamum Ulappagupaivum*. New Century Book House (P)Lit- Chennai – 600 098.
[3] Kanjana, Ira. *Ilakiyamum Ulaviyalum*. Vishnupriya Pathipagam, Madurai, 1997.
[4] Balasubramaniam Sirpi. *Puthiya Tamil Ilakiya Varalaru: Pandaiya Tamil Ilakkiyam Thoguthi 1*. Sahitya Academy, 2013.
[5] *Kurunthogai*. www.tamilvu.org/library/l1220/html/l1220ind.htm Accessed on 10 August 2023.
[6] Alexander Bersin Matt Linden. *Mind*. studybuddhism.com/ta/munaivar-alekcantar-percin Accessed on 10 August 2023.
[7] K. V. Bala Subramaniyan., A. M. Parimanam. *Kurunthokai Moolamum Uraiyum*. New Century Book House (Pvt Ltd), Chennai, 2004.
[8] Boaz, G.D. *Elements of Psychology*. p.170.
[9] Anbarasu Shanmugam., K. C.Vincent. *Udal Madam Ulle*. Chennai.
[10] Ilampuranar, (Urai). *Tolkappiyam - Porulathikaram. Agathinai*. Manikkavasakar Publishing House - Chennai 600 108.
[11] Nithya. Pa, & Manikannan. "Ulappaguppaivu Nokil Jeyamohiniyin Nadagappirathi *Pathumai*." *International Journal of Tamil Language and Literature*, E-ISSN: 2581-7140 Volume - 4. Issue-1. December – 2021.
[12] Saraladevi, M. "Kurunthogaiyil Iyarkayin Katputhiran." *Puthiya Aviyam*, ISSN - 2456-821X Volume 2, Sacred Heart College, Vellore District, Tirupattur-2.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement: இல்லை / NIL.

கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement: இல்லை / NIL.

கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன். / I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது. / The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.